# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

தனிச்சுற்றுக்கு
நன்கொடை
ரூ-10

மார்ச் 2015

பருவம் 1 புனல் 6



## உனக்கு முருகன் என்றால் எனக்கு புத்தர்



# பெண்கள் உண்மை விடுதலையடைய வேண்டுமானால் “ஆண்மை” அழிய வேண்டும்

தோழர் பெரியார்

பெண்கள் விடுதலையின் பேரால் உலகத்தில் அனேக இடங்களில், அனேக சங்கங்களும், முயற்சிகளும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வருவது யாவரும் அறிந்ததே. இம்முயற்சிகளில் ஆண்களும் மிகக் கவலையுள்ளவர்கள் போலக் காட்டிக் கொண்டு மிகப் பாசாங்கு செய்து வருகின்றார்கள். ஆண்கள் முயற்சியால் செய்யப்படும் எவ்வித விடுதலை இயக்கமும் எவ் வழியிலும் பெண்களுக்கு உண்மையான விடுதலையை அளிக்க முடியாது. தற்காலம் பெண்கள் விடுதலைக்காக பெண்மக்களால் முயற்சிக்கப்படும் இயக்கங்களும் யாதொரு பலனையும் கொடுக்காமல் போவதல்லாமல் மேலும் மேலும் அவை பெண்களின் அடிமைத்தனத்திற்கே கட்டுப்பாடுகளை பலப்படுத்திக்கொண்டே போகும் என்பது நமது அபிப்பிராயம்.

எதுபோலவென்றால், இந்திய பொதுமக்கள் விடுதலைக்கு வெள்ளைக்காரரும் பார்ப்பனரும் பாடுபடுவதாக ஏற்பாடுகள் நடந்து வருவதின் பலனாக எப்படி நாளுக்கு நாள் இந்திய மக்களுக்கு அடிமைத்தனம் விடுதலை பெற முடியாதபடி பலப்பட்டு என்றென்றைக்கும் கட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறதோ அதுபோலவும் சமூக சீர்திருத்தம், சமத்துவம் என்பதாக வேஷம் போட்டுக் கொண்டு பார்ப்பனர்களும் புராணக்காரர்களும் சீர்திருத்தத்தில் பிரவேசித்து வருவதன் பலனாக எப்படி சமூகக் கொடுமைகளும் உயர்வு தாழ்வுகளும் சட்டத்தினாலும் மதத்தினாலும் நிலைபெற்று பலப்பட்டு வருகின்றதோ அது போலவுமே என்று சொல்லலாம்.

அன்றியும் ஆண்கள், பெண்கள் விடுதலைக்குப் பாடுபடுவதால் பெண்களின் அடிமைத்தனம் வளருவதுடன் பெண்கள் என்றும் விடுதலை பெற முடியாத கட்டுப்பாடுகள் பலப்பட்டு கொண்டு வருகின்றன. பெண்களுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும் பெண்கள் விடுதலைக்காக பாடுபடுவதாகவும் ஆண்கள் காட்டிக் கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்றுவதற்குச் செய்யும் சூழ்ச்சியே ஒழிய வேறல்ல. எங்காவது பூனைகளால் எலிக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது நரிகளால் ஆடு கோழிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது முதலாளிகளால் தொழிலாளிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது வெள்ளைக்காரர்களால் இந்தியர்களுக்கு செல்வம் பெருகுமா? எங்காவது பார்ப்பனர்களால் பார்ப்பனரல்லாதார்களுக்குச் சமத்துவம் கிடைக்குமா? என்பதை யோசித்தால் இதன் உண்மை விளங்கும். அப்படி ஒருக்கால் ஏதாவது ஒரு சமயம் ஷி விஷயங்களில் விடுதலை உண்டாய் விட்டாலுங்கூட ஆண்களால் பெண்களுக்கு விடுதலை கிடைக்கவே கிடைக்காது என்பதை மாத்திரம் உறுதியாய் நம்பலாம். ஏனெனில் ஆண்மை என்னும் பதமே பெண்களை இழிவுபடுத்தும் முறையில் உலக வழக்கில் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது என்பதைப் பெண்கள் மறந்துவிடக் கூடாது அந்த ஆண்மை உலகில் உள்ள வரையிலும் பெண்மைக்கு மதிப்பு இல்லை யென்பதைப் பெண்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். உலகத்தில் “ஆண்மை” நிற்கும் வரையில் பெண்கள் அடிமையும் வளர்ந்தே வரும். பெண் களால் “ஆண்மை” என்ற தத்துவம் அழிக்கபட்டாலல்லாது பெண்மை விடுதலை யில்லை யென்பது உறுதி. “ஆண்மை”யால் தான் பெண்கள் அடிமையாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அன்றியும், இந்துமதம் என்பதில் பெண்களுக்கு என்றென்றும் விடுதலையோ, சுதந்திரமோ எத்துறையிலும் அளிக்கப்படவே இல்லை என்பதைப் பெண் மக்கள் நன்றாய் உணர வேண்டும்.

பெண்கள் விஷயமாய் இந்துமதம் சொல்லுவதென்றால், கடவுள் பெண்களைப் பிறவியிலேயே விபசாரிகளாய்ப் படைத்து விட்டார் என்பது ஆகச் சொல்கின்றதுடன், அதனாலேயே பெண்களை எந்தச் சமயத்திலும் சுதந்திரமாய் இருக்க விடக்கூடாது என்றும், குழந்தைப் பருவத்தில் தகப்பனுக்குக் கீழும், வயோதிகப் பருவத்தில் (தாம் பெற்ற) பிள்ளைகளுக்குக் கீழும், பெண்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும் சொல்கிறது.

கடைசி பக்கம் ➡

காட்டாறு
அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

தொகுப்புக்குழு
யாழ் மொழி
பெரியார் செல்வி
பிரபாகரன் அழகர்சாமி
கணியூர் தமிழ்ச்செல்வன்
அ.ப. சிவா
கொளத்தூர் குமார்
செல்லையா முத்துச்சாமி
மே.கா. கிட்டு
பூ. மணிமாறன்

சட்ட ஆலோசனைக்குழு
வழக்கறிஞர் க.ஜெயராஜ்
வழக்கறிஞர் வெ.பழனிச்சாமி
வழக்கறிஞர் பிரபாத்

விளம்பரத் தொடர்பு
சி. விஜயன் 94881 79109,
ஜீவாநகர் குமார் 99944 77013

விற்பனைத் தொடர்பு
ஆ. பாண்டியன் 96591 12891,
கடத்தூர் காந்தி 99428 76665
வெங்கட் 95788 44141

சந்தா தொடர்பு
அ. கிருட்டிணகுமார்
97882 97428

வடிவமைப்பு
Mukizh Media

அச்சு
செல்வக்குமார்
BS Graphics, Chennai

அலுவலக நிர்வாகம்
சி. இராவணன் 97868 89325

ஆக்கங்கள், விமர்சனங்களுக்கு
காட்டாறு, 1 / 810
முத்தமிழ்நகர், நத்தம் சாலை,
திண்டுக்கல். 624003
kaattaaru2014@gmail.com

வெளியீடு:
சுயமரியாதை கலைப் பண்பாட்டுக் கழகம்



# உனக்கு முருகன் என்றால் எனக்கு புத்தர்

பண்பாட்டுப்புரட்சி இல்லாது, அரசியல் புரட்சி வெல்லாது! என்ற முழக்கத்துடன் தன் உண்மை முகத்தையும் சேர்த்துக் காட்டியுள்ளார் தோழர்... மன்னிக்கவும் ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீமானடிகளார். ‘உனக்கு இராமன் என்றால் எனக்கு இராவணன்’ என்ற வரிகளைப் படித்தவுடன் ‘ஆகா சிங்கம் கிளம்பிடுச்சு...’ ன்னு நினைத்தோம். உடனே அடுத்த வரியிலேயே ‘உனக்குப் பிள்ளையார் என்றால் எனக்கு முருகன்’, உனக்கு ‘சிவாஜி என்றால் எனக்கு இராஜராஜன்’ என்று யு டர்ன் அடித்து விடுகிறார்.

பிள்ளையார் என்பவர் பார்ப்பனர்களால் திணிக்கப்பட்டவர்தான். யாருக்கு மாற்றாக? புத்தருக்கு மாற்றாக. புத்தர் போதி மரத்தடியில் அதாவது அரச மரத்தடியில் அறிவு பெற்றார் என்ற கதையின் அடிப்படையில் சங்ககாலம் முதல் அரசமரத்தடிகளில் புத்தர் சிலைகள் வைக்கப்பட்டு வணங்கப்பட்டன. புத்தருக்கு இன்னொரு பெயர் விநாயகன். பல நூற்றாண்டுகளாக இருந்த இந்த பௌத்தப் பண்பாட்டுக்கு எதிராக வைதீக மதப் பார்ப்பனர்களால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டவன்தான் இந்த இந்து மத விநாயகன். அதே அரச மரத்தடியில், அதே விநாயகன் என்ற பெயரில் ஒரு இந்துக்கடவுளை உருவாக்கினார்கள். புத்தர் சிலைகள் இருந்த இடத்திலெல்லாம் அவற்றை அடித்து நொறுக்கிவிட்டு அந்த இடங்களில் ‘இந்து விநாயகன்’ சிலையை நிறுவினார்கள். அடக்கப்பட்ட மக்களுக்கான பண்பாட்டு அடையாளத்தை அழித்து நமக்கு எதிரான பண்பாட்டு அடையாளத்தை நம்மிடம் ஏற்றி வைத்தனர். வரலாற்று அறிவு சிறிது மட்டுமே இருப்பவர்கள்கூட ‘உனக்குப் பிள்ளையார் என்றால் எனக்கு புத்தர்’ என்றுதான் தான் முழங்கியிருப்பார்கள். ஆனால் வருமான அறிவு உள்ளவர்களிடம் இதை எதிர்பார்க்கக்கூடாது.

பிள்ளையார் கோவிலோ, முருகன் கோவிலோ இரண்டு கோவிலின் கருவறைக்குள்ளும் தமிழன் நுழைய முடியாது.

பிள்ளையார் கோவில் முன்பு நின்றாலும் நாம் தேவடியாள் மக்கள்தான். முருகன் கோவில் முன்னால் காவடியையும் வேலையும் தூக்கிக்கொண்டு நின்றாலும் நாம் தேவடியாள் மக்கள் தான். சட்டப்படியும், சாஸ்திரத்தின்படியும் உள்ள இந்த இழிநிலையை அழிப்பது அல்லது அழிக்க முயல்வதுதான் பண்பாட்டுப்புரட்சி.

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோவிலில் கருவறைக்கு உள்ளேயும் அனைவரையும் அனுமதிக்கிறார்கள். முருகன் கோவிலுக்குப் போவதைவிட மேல்மருவத்தூருக்குப் போவது சுயமரியாதையான காரியம்தான். வருமான அறிவின்படி சிந்தித்தால்கூட ஆதிபராசக்திக்கு நல்ல மார்க்கெட் வேல்யூதான். ஸ்ரீமானடிகள் அப்படிச் சிந்தித்திருக்கலாம். ‘பெரியாரின் கருவறை நுழைவைச் செயலில் காட்டியது ஆதிபராசக்தி பீடம் தான்’ என்று ஒரு முற்போக்கு வேடம் போடுவதற்கும் வாய்ப்பாக இருந்திருக்கும்.

அதேபோல ‘உனக்கு சிவாஜி என்றால் எனக்கு இராஜராஜன்’ என்கிறார். இருவருக்கும் என்ன வேறுபாடு? இருவருமே பார்ப்பன அடிமைகள் தானே? இராஜராஜன் மட்டுமல்ல தமிழ்நாட்டை ஆண்ட எந்த மன்னனும் பார்ப்பனர்களை எதிர்த்து நிற்கவில்லையே? இந்தியா என்ற பகுதியில் உள்ள பெரும் பாலான மன்னர்களின் நிலையும் இதுதானே? அனைத்து மன்னர்களும் பார்ப்பனப்பாட்டைப் பின்பற்றித் தான் அரசாண்டார்கள். இதில் என்ன பண்பாட்டுப் புரட்சி? சிவாஜியைக் கொள்முதலாகப் போட்டு மதவெறியை ஊட்டி தாக்கரேக்களின் குடும்பங்கள் வளமாயின. அதே போல் நாங்கள் இராஜ ராஜனை கொள்முதலாகப் போட்டு தொழிலைத் தொடங்கப்போகிறோம் என்பதைத்தான் இந்த முழக்கம் தெளிவுபடுத்துகிறது.

பார்ப்பனப் பண்பாடுகளுக்கு எதிராக பெரியார் பண்பாடுதான் இருக்க முடியும். ஆதிகால பௌத்தர்களின் பண்பாடுதான் இருக்கமுடியும். பெரியார், புத்தர், அம்பேத்கர் ஆகியோர் படங்களைத் தெளிவாகத் தவிர்த்துவிட்டு இந்தியத் துணைக்கண்டத்தில் யாரும் பண்பாட்டுப் புரட்சியை முன்னெடுக்க முடியாது. அப்படிச் சொல்பவர்கள் மக்களை முட்டாள்கள் என நம்பிக் கொண்டிருக்கிறார்கள் என்றே பொருள்.

# கோவிலும் கழிவறையும்

சித்தோடு இரா.கமலக்கண்ணன்



நிம்மதியென்பது
கழிவறையைத் தாழிடும்போது
தொடங்குகிறது.

எப்போது சென்றாலும்
சிரித்த முகத்துடனே வரவேற்கும்

எனது அந்தரங்கத்தைக் கண்டாலும்
யாரிடமும் கோள் மூட்டியதில்லை,
முகம் சுளிக்காமல்
கழிவுகளை ஏற்றுக்கொள்ளும்
கழிவறைக்கு நான் தருவதோ
ஒரு வாளித் தண்ணீர்.

என் அவசரங்களையும்
என் அமைதியினையும்
நல்ல நண்பனாய் பார்த்திடும்.

கோவிலைவிட
கழிவறையே உயர்ந்ததென்பேன்
இங்கு சிறப்பு தரிசனமில்லை,
கருவறை நுழையத் தடையில்லை
காணிக்கை கேட்கும் தரகனில்லை.

ஆகவே
கோவில் இல்லா ஊரில் குடியிருக்கலாம்
கழிவறை இல்லா வீட்டில் வாழ வேண்டாமே!



# குழந்தை வளர்ப்பில் பெற்றோர்களின் பங்கு

முனைவர்.பூ.மணிமாறன்



குழந்தை வளர்ப்பு என்பது தனிமனித தனிக்குடும்ப வளர்ப்பாக கருதி, நமக்குள் சுருங்கிக் கொள்ளாமல் இது ஒரு சமூகம் சார்ந்த பணியாகும். என்பதனை நாம் உணர்ந்தால் மட்டுமே சில மாற்றங்களை ஏற்படுத்த முடியும்

குழந்தைகளின் வளர்ப்புமுறை பற்றி பல்வேறு வழிகாட்டு நூல்கள் வெளிவந்து கொண்டுள்ளன. பல்வேறு வல்லுனர்கள் தங்களது கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். பல்வேறு தளங்களில் விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. நமது பெற்றோர்கள் தமது குழந்தைகளைக் கண்டிப்பாக வளர்க்க வேண்டும் என்றும், தமது கருத்துக்களைப் பின்பற்றி வளரவேண்டும் என்றும், அதனைப் பிறரிடம் வெளிப்படுத்துவதன் மூலம் தாம் பெருமை எய்த வேண்டும் என்றும் விரும்புகின்றனர். ஆனால் குழந்தைகளின் மனநிலையோ எதிரான நிலைப்பாட்டினை நோக்கிச் செல்கிறது. பெற்றோர்களின் கட்டுப்பாடு - கட்டுப்பாடின்மை குழந்தைகளுக்கு எங்ஙனம் பிடிக்கிறது - பிடிக்காமல் போகிறது எனக்காண்போம். பிள்ளைகள் பெற்றோரின் கட்டுப்பாடு, கட்டுப்பாடின்மை ஆகிய இரண்டினாலும் பாதிக்கப்படுகின்றார்கள் என்பது உளவியலாளர்களின் ஆய்ந்தறிந்த கருத்தாக உள்ளது.

பெற்றோர்களின் செயல்பாடு குழந்தைகளிடம் ஏற்படுத்தும் எதிர்வினை நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி விடுகிறது. அதாவது பெற்றோர்கள் எவ்வளவு தூரத்திற்குக் கண்டிப்பும், கடினமும், தண்டனை விதிப்பவர்களாகவும் இருக்கின்றார்களோ, அந்தளவிற்கு அவர்களின் பிள்ளைகள் பின்னர் மிகவும் வலுச்சண்டையாளர்களாக, ஊறு விளைவிப்பவர்களாக, இன்னா செய்பவர்களாக வளர்கின்றார்கள் என்பது உளவியலாளர்களின் கணிப்பீடு. இதனை நாம் நமது நடைமுறை அனுவப வாயிலாகக் காணலாம்.

கண்டிப்பான பெற்றோரின் பிள்ளைகள் ஒருசாரர் மிகவும் பயந்த சுபாவமுடையவர்களாக அல்லது ஆக்கிரமிப்புத்தன்மை மிக்க வலுச்சண்டைக்காரராக வளர்வார்கள். ஆக குழந்தை வளர்ப்பு என்பது எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்? ஒவ்வொரு செயலுக்கும் ஒரு எதிர்ச்செயல் உண்டு என்பதனை மனதில் கொண்டு பார்க்கும் போது ஒரு விளைவின் மறுவிளைவினை நாம் காணலாம் என்பதனை உளவியல் ரீதியில் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. அதன் நன்மை தீமைகளை எடுத்துரைப்பதோடு பிள்ளைகளை எவ்விதம் வளர்க்க வேண்டும்,

அவர்கள் நல்ல பண்பாளர்களாக மாறுவதற்கு பெற்றோரின் நடத்தையில், எண்ணத்தில் என்னென்ன மாற்றங்கள் ஏற்படவேண்டும் என்பதனை உளவியலாளர்கள் முன்வைக்கின்றார்கள். அவற்றை பெற்றோர்கள் கணக்கில் கொள்ள வேண்டும். National Longitudinal Survey of Children and Youth (NLSCY) என்னும் நிறுவனம் அண்மையில் நடத்திய ஆய்வின்படி, பெற்றோர் மிகக் கண்டிப்பான பிள்ளை வளர்ப்பு முறையினைக் கொண்டவர்களாக இருப்பதால், பிள்ளைகள் மிகக்கூடியளவு வன்முறைத் தன்மைகள், கவலைக்கிடமான, பொதுநல நோக்கற்ற அல்லது குறைந்த பண்புகளைக் காண்பிக்கின்றார்கள் என ஆலோசனை நல்கியுள்ளது. மூத்த பகுப்பாய்வாளரான எலினோர் தாமஸ் "பிள்ளைவளர்ப்பில் மாற்றங்கள் ஏற்படும் போது, பிள்ளைகளின் நடத்தையிலும் மாற்றம் ஏற்படும் என்பது ஒரு பெரும் செய்தி" எனக் குறிப்பிட்டுள்ளார்.

சில ஆய்வுகள் நமக்கு பல உண்மைகளை வெளிப்படுத்துவதாக அமைகின்றன. கடந்த எட்டு ஆண்டுகளுக்கு மேலாக கனடா நாட்டு சமூக அபிவிருத்தி நிலையமும், கனடா நாட்டு புள்ளிவிபர நிலையமும் இணைந்து 4,129 பிள்ளைகளைப் பின்பற்றிச் செய்த ஆய்வின் விளைவாக இந்த முடிவுகள் பெறப்பட்டன. பிள்ளைகள் இரண்டு வயதிற்கும் ஐந்துவயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருக்கும்போது 1994 - 95 காலப்பகுதியிலும், அவர்கள் 10 மற்றும் 13 வயதாக இருக்கும்போது 2002 - 03 காலப்பகுதியிலும் இவ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த எட்டு ஆண்டுகளுக்கு மேலான காலப்பகுதியில் பெற்றோர் தமது கண்டிப்பு, தண்டனைகளைக் குறைவாகக் கொண்டிருந்த போது பிள்ளைகளின் வன்செயல்கள் அல்லது துன்புறுத்தும் பண்பு குறைந்துள்ளமை அவதானிக்கப் பட்டுள்ளது.

அதாவது ஒருபோதுமே தண்டனை அழிக்காத பெற்றோரின் பிள்ளைகளைப் போன்று இந்தப் பிள்ளைகளும் குறைந்தளவு வன்முறைகளைக் கொண்டிருந்தனர் என்பது வெளியாகியுள்ளது. ஆய்வு மேற்கொள்ளப்பட்ட காலத்தில் மிகவும் தண்டிப்பவர்களாக இருந்த பெற்றோரின் பிள்ளைகளே அதிக வன்முறைப் பண்பினை உடையவர்களாகக் காணப்பட்டார்கள் என்பதும் ஆய்வின் முடிவாகும். தண்டனை வழங்கும் பெற்றோரின் பிள்ளைகள், பயந்த சுபாவம் உடையவர்களாக உள்ளனர். தண்டனை அளிக்காத பெற்றோரின் பிள்ளைகள், சமூகம் சார்ந்த நடத்தையில் எந்தப் பயனையும் எதிர்பார்க்காத சூழல் காணப்படுகிறது. பெற்றோருக்கு மட்டுமன்றி சமூகத்திற்கும் நன்மைபயக்கும் செயல்களைச் செய்தல்... போன்ற பண்புகளைக் கொண்டவர்களாக வளர்வதையும் இந்த ஆய்வு எடுத்துக்காட்டுகின்றது.

குழந்தைகளின் நடத்தை மாற்றங்கள் பற்றி ஆராயும்போது பல்வேறு கோணங்களில் பிரச்சனைகளை அணுக வேண்டிய தேவையுள்ளது. பிள்ளைகளின் நடத்தைகளில், பெற்றோரின் வருமான நிலைமைகளும் தாக்கத்தைக் கொண்டுள்ளன. குறைந்த வருமானத்தைக் கொண்ட குடும்பங்களில் இருந்துவரும் பிள்ளைகளிடம் மிக அதிகஅளவு வன்முறைப்பண்பு காணப்படுவதாக ஆய்வு காட்டுகின்றது. எனினும் இந்த நிலைமைகளுக்குச் சிலர் எதிர்த்தாக்கம் உடையவர்களாகவும் காணப்படுகின்றனர் என்பது ஏனைய வருமானக் குழுக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது கண்டறியப்பட்டுள்ளது என்பதும் கருத்திற்கொள்ளத் தக்கது. இவற்றிற்கு குடும்ப அமைப்பிலும் குடும்பத்தில் காணப்படும் ஒவ்வாத நடைமுறைகளிலும் உள்ள குறைபாடுகளும் காரணமாக அமைவதாகக் கருதப்படுகின்றது.

கீழ்க்காணும் சில கருத்துருக்கள் மேலைநாடுகளை மையப்படுத்தியே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. மிகக்குறைந்த வருமானத்தை உடைய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள், மிக அதிக அளவு வன்முறை உடையவர்களாகக் காணப்படுவதற்கு குடும்பங்களின் குழப்பநிலை காரணமாகின்றது.

2. குறைந்தளவு வருமான நிலை, தாய்வழி மனவழுத்தத்திற்குக் காரணமாக காரணமாகின்றது

3. குழந்தைகளின் பயந்த நிலைக்கு குடும்பத்தின் குழப்பநிலை காரணமாக அமைகின்றது எனக் கண்டறியப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேசமயம் இந்திய சூழலில் குழந்தைகளின் நடத்தை மாற்றங்கள் என்பது குறித்து பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றைப் பின்வருமாறு வகைபடுத்தலாம்.

1. குழந்தை வளர்ப்பில் அக் குழந்தை சார்ந்த ஜாதி முக்கியப்பங்கு வகிக்கின்றது.

2. ஜாதிய மதச் சடங்குகள் குழந்தையின் நடத்தையில் பல வினையாற்றுகிறது.

3. பெற்றோர்களின் வற்புறுத்தல் மற்றும்

அவர்களது பின்பற்றல் ஆகியவை மட்டுமே குழந்தைகளின் ஆழமான மனப்பதிவுகளாக அமைந்து விடுகிறது.

மேற்கண்ட மனப்பதிவுகளே பிற்காலத்தில் சமூக பிளவுகளுக்கு விரிசல்களுக்கு காரணிகளாக அமைகின்றன.

இந்த ஆய்வின் படி பெற்றோர் பிள்ளைகளோடு ஒட்டி உறவாடவேண்டியதும், கண்டிப்பிற்குப் பதிலாக அன்பினால் ஆட்சி செய்யவேண்டும் என்பதும் எடுத்துக் கூறப்படுவது கவனிக்கத்தக்கது. பிள்ளைகளின் நன்னடத்தைக்காக, அவர்களின் நல்லொழுக்கத்திற்காகத்தான் நாம் அவர்களைத் தண்டிக்கின்றோம் என்று அடிக்கடி கூறும் பெற்றோர்களை நாம் கண்டிக்க வேண்டியவர்களாக உள்ளோம். ஆனால் அவர்கள் தண்டனை அளிப்பதால் பிள்ளைகளின் பிஞ்சு உள்ளத்தில் அது ஏற்படுத்தும் தாக்கம் அல்லது பாதிப்பு எத்தகையது என்பதனை பலர் உணர்ந்து கொள்வதில்லை. தண்டனை பெற்ற பிள்ளை இந்தத் தண்டனையால், தான் செய்த தவறுக்குத் தானே பொறுப்பு என்பதனை உணர்ந்து கொள்ள முடியுமா? அல்லது அதன் தாக்கத்தை அறிந்து கொள்ள முடியுமா? என்பதனைச் சிறிதேனும் சிந்தித்துப்பார்க்கும் நிலை பெற்றோருக்கு உண்டா? அல்லது சிந்தித்துப் பார்க்க முனைகிறார்களா ? என்பது கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

பெற்றோரின் நெருக்கமான தொடர்பு, பிள்ளைகளிளிடம் இன்பகரமான சூழலைத் தோற்றுவிக்கின்றது என்பது உளவியலாளர்களின் முடிவு. பல உளவியலாளர்கள் கூற்றுப்படி பதின்மவயதினை எட்டிப்பிடிக்கும் பிள்ளைகளின் மனத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளில் பெற்றோரின் பிள்ளை வளர்ப்பு முறைகள், அவர்கள் பிள்ளைகளோடு கொண்டுள்ள தொடர்பு என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன. பிள்ளைகள் ஆளுமை நிறைந்தவர்களாக வளர்வதற்குப் பெற்றோரின் வளர்ப்புமுறை மிக அவசியமாகும். பிள்ளைகள் உள, உடல் வலுமிக்கவர்களாக வளர்வதற்கு அவர்களுக்கு இயல்பாகவே தேவைப்படும் அடிப்படை உளவியற் தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டியது இன்றியமையாதது. காப்பு, அன்பு, அரவணைப்பு, மதிப்பு (கணிப்பு), போன்ற அடிப்படைத் தேவைகள் பிள்ளைகளுக்கு மிக அவசியமானவை. இவற்றை அவர்களுக்குக் கிடைக்கும் வண்ணம் தங்களை

**மிகவும் தண்டிப்பவர்களாக இருந்த பெற்றோரின் பிள்ளைகளே அதிக வன்முறைப் பண்பினை உடையவர்களாகக் காணப்பட்டார்கள் என்பதும் ஆய்வின் முடிவாகும். தண்டனை வழங்கும் பெற்றோரின் பிள்ளைகள், பயந்த சுபாவம் உடையவர்களாக உள்ளனர்.**

அர்ப்பணித்துச் செயற்படவேண்டியவர்கள் வேறுயாருமல்லர். அது தாய், தந்தையரே.

குாந்தை ஆரம்பத்தில் தாயின் அணைப்பினிலேயே வளர்கின்றது. பெரும்பாலான உயிரினங்களின் தன்மைகளில் தாய்மையின் பங்கு அதிகமானதாகவே அமைகின்றது. கருத்தரித்து, பெற்று வளர்ப்பதில் தாயின் பங்கு அதிகம். அது பறவையானாலும் சரி விலங்குகளாக இருப்பினும் சரி தாயின் அணைப்பினிலேயே குழந்தைப் பருவம் தங்கியிருப்பதைக் காணலாம். எடுத்துக்காட்டாக குரங்கின் பழக்கவழக்கத்தை நாம் எடுத்து நோக்கினால் அங்கு குழந்தைப்பருவத்தில் தாயே தனது குட்டியை கட்டி அணைத்துச் செல்வதைக் காணலாம் இதன் படி மனித வளர்ச்சிப் பருவங் களிலும் இத்தகைய பண்புகளை நாம் காண முடிகின்றது.

மனித வளர்ச்சிப் பருவத்தில் பதின்மவயதுப் பருவம் மிகவும் சிக்கல் நிறைந்ததாகக் காணப்படுகின்றது. இந்தக் காலத்தில் தாய் தந்தை இருவரதும் அணைப்பு, நெருக்கம் பிள்ளைகளை நல்வழிப்படுத்த அவசியமானதாகக் காணப்படுகின்றது. மனமுறிவுற்ற பிள்ளைகளை ஆராய்ந்ததில் தந்தையுடனான நெருக்கமான போக்கு பெண்பிள்ளைகளுக்கு மனமுறிவை, அல்லது மன அழுத்தத்தைக் குறைப்பதாகக் காணப்படுகின்றது என ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. மக்கள், பிள்ளை வளர்ப்பு முறைகள் எவ்விதம் தாக்கங்களை ஏற்படுத்துகின்றது என்பதில் மிகுந்த அக்கறையாக உள்ளனர். ஆனால் எவ்விதம் இந்த மாற்றத்தை ஏற்படுத்துவது என்பது கடினமான ஒன்றாகும் என சிக்மன்ட் பிரைட் கருத்துத்தெரிவித்துள்ளர்.

குழந்தை வளர்ப்பு என்பது தனிமனித தனிக்குடும்ப வளர்ப்பாக கருதி, நமக்குள் சுருங்கிக் கொள்ளாமல் இது ஒரு சமூகம் சார்ந்த பணியாகும். என்பதனை நாம் உணர்ந்தால் மட்டுமே சில மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

அரசூர் அ.ப.சிவா

# 5 சுயமரியாதை வாழ்வே சுக வாழ்வு

பசித்தவனுக்கு மீனைத் தராதே

மீன் பிடிக்க கற்றுக்கொடு.

கடந்த வாரம் சந்தித்த நண்பர் ஒருவர் வழக்கமான பேச்சினிடையே அவர் சில நண்பர்களுடன் சேர்ந்து சமூக சேவை செய்து வருவதாகவும் அச்சேவையில் என்னையும் இணைத்துக்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார். சரி அப்படி என்னதான் சேவை செய்கிறீர்கள் ? என்று நான் கேட்டதுதான் பாக்கி மரம் நடுவதில் ஆரம்பித்து வரிசையாய் அடுக்கி கொண்டே போனார். எனக்கு தலைசுற்றலே வந்து விட்டது. அவர் சொன்ன அனைத்து வேலைகளும் இல்லாதவர்களுக்கு செய்யும் பொருளுதவி என்ற அடிப்படையிலேயே அமைந்தது.

போதாக்குறைக்கு உடனிருந்த மற்றோர் நண்பர் நானும் கூட இன்னும் கொஞ்சம் நாளில் அவர்களொடு இனைவதாக கூறினார்.ஏன் இப்பவே இனைந்து கொள்ளுங்களேன் என நான் கூறியதற்கு அவரின் பதில்

"எப்படியாவது மாசம் ஒரு இலட்சம் வாடகை வர்ற மாதிரி பண்ணியாச்சுனா, அப்புறம் அப்படியே சமூகசேவை செய்யப்போயிடலாம்"என்ன கொடுமை இவுனுங்க கூடெல்லாம் நாமும் வாழ வேண்டியுள்ளதே..

அடிப்படையில் உலகமயமாக்கப்பட்ட இந்நாட்களில் அடித்தட்டு மக்களின் உழைப்பை உறிஞ்சி அதில் ஒரு பகுதியை ஊதியமாகவும், மற்றுமொரு சிறு பகுதியை சேவை என்ற பெயரிலும் கொடுத்துப் பழகி விட்டது ஆதிக்க சக்திகள். முதலாளித்துவம். 50 தொழிலாளிகளின் உழைப்பை உறிஞ்சும் ஒரு முதலாளி 5 ஏழைகளின் கல்விக்கு உதவி செய்கிறான் .

உண்மையிலேயே அடித்தட்டு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு செய்யும் சேவை என்பது (பெரியாரியல்வாதிகள் சேவை என்ற வார்த்தையை பயன்படுத்துவதெயில்லை)

அவர்கள் இழந்த உரிமைகளை அவர்களுக்கு தெரிய வைப்பதே.தெரிய வைப்பதும் சுரண்டுபவனை அடையாளம் காட்டவே.அடையாளம் காட்டுவதும் இழந்தவன் அவனை நோக்கி போராடவே.

ஏற்றத்தாழ்வுகளாய் பல ஆயிரமாண்டு வாழ்ந்து வந்த சமூகம் கண்டிப்பாகச் சமமாய் இல்லை. இருப்பதை எடுத்து இல்லாத இடத்தில் போட்டால்தான் சமூகம் சமமாகும். அதிகமாக இருக்கும் இடத்திலிருந்து அது எடுக்கப்பட வேண்டுமெயொழிய ஆதிக்கக்காரனால் கொடுக்கப் படக்கூடாது. ஒரு வேளை அப்படி கொடுக்கப்பட்டால் அச்சமூகம் அடிமைச் சமூகமாகவேயிருக்கும்

இவர்களை சேவை செய்பவர்களாகக் காட்ட எப்போதும் தேவை அடித்தட்டு மக்கள் எனவே அவர்களை அவர்களாகவே இருக்க ஆதிக்க சமூகம் விரும்பும்

இப்போது அந்த நண்பரிடம் நான் வெளிநாட்டுப் பழமொழி ஒன்றை மேற்கோள் காட்டினேன் ..

பசித்தவனுக்கு மீனைத் தராதே

மீன் பிடிக்க கற்றுக்கொடு.

நீங்கள் மீனை கொடுத்துக் கொண்டேயிருக் கிறீர்கள், அது கூட ஒருநாள் நின்று போகலாம், நாங்கள் அவர்களுக்கு மீனைத்தரவில்லை மீன் பிடிக்க கற்றுகொடுக்கிறோம். நாளை நாங்கள் இல்லையென்றால் கூட அவர்கள் மீன் பிடித்துக்கொள்வர்கள் .

இப்படி செய்வதனால் ஆதிக்க சக்திகள் எங்களை எதிரியாய்ப் பார்க்கிறார்கள் அது இயல்புதான் யாருக்காகப் போராடுகிறோமோ அவர்கள் கூட சில இடங்களில் ஆதிக்க சக்திகளின் சூழ்ச்சியால் எங்களை எதிரியாய்ப் பார்க்கும் நிலையுமுண்டு

அனைத்து விதமான பொருளாதார நிறைவும் பெற்று இவர்கள் சொல்வது போல சமூக சேவை செய்ய வருபவர்கள் தன் மன நிம்மதிக்காக இதை செய்கிறோம் என சொல்லுகிறார்கள். ஆம் அது தான் உண்மை. பொருள் மட்டும் அனைத்து மன நிறைவையும் தராது. அது போலவே நீங்கள் சேவை என்ற பெயரில் தரும் பொருளும் விளிம்பு நிலை மக்களுக்கு முழுமையாகப் பயன்தராது. மாறாக அவர்களின் அறியாமையைப் போக்கி எல்லாவித அடக்குமுறைகளையும் எதிர்த்துப் போராடக் கற்பிப்பதும், ஒன்று சேர்ப்பதும், உடன் நிற்பதுமே தீர்வாகும்.

எனவே நண்பர்களே.

மீன் பிடிக்க கற்றுக்கொடு

# இராவணலீலா

## தனித்தமிழ்நாட்டுத் தேசியவிழா



வருகிற ஆண்டு முதல் நமது எண்ணங்களுக்கு மதிப்பளிக்காமல் தொடர்ந்து வடநாட்டார் 'இராமலீலா'வைத் தேசிய விழா போன்று நடத்த முன்வருவார்களேயானால் நாமும் அதே முறையில் நமது "தனித்தமிழ்நாட்டுத் தேசியவிழா" என்ற பெயரிலேயே தமிழகம் முழுவதிலும் "இராவண லீலா" வை நடத்திக் காட்டுவோம். அவர்கள் எந்த நாளில் செய்கிறார்களோ அதே நாளில் நாமும் இங்கு செய்யலாம்.

என்றைக்கு அவர்கள் அக்கொடும் நிகழ்ச்சியை, அதாவது தமிழ்பெருவேந்தர் இராவணன், அவர் தம் குடும்பத்தினரைக் கொளுத்துவதைப் பெரும்விழா 'இராமலீலா' என்ற பெயரில் நடத்துவதை நிறுத்துகிறார்களோ அன்றைக்கே நாமும் நமது விழாவினை - அயோக்கிய இராமனைக் கொளுத்தும் நிகழ்ச்சியை நிறுத்துவோம் என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்வோம்.

– ஈ.வெ.ரா. மணியம்மையார்

## மத சித்தாந்தங்களும் மனு நீதி சாஸ்திரங்களும்




இன்று அனைத்துலக மகளிர் தினம். இந்தப் பெண் எழுச்சி தினம் தமிழீழம் எங்கும் கொண்டாடப் படுவதை யிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்... நாம் ஒடுக்கப்பட்டு வரும் ஓர் மக்கள் இனம். அந்நியனின் அடக்குமுறையால் நாம் அழிக்கப்பட்டு வந்தபோதும் எமக்குள்ளேயே, எமது சமூக வாழ்வில் நாம் எம்மவர்களை மோசமான முறையில் அடக்கி ஒடுக்கி வருகிறோம். இப்படியாக எம்மத்தியில் நிலவி வரும் ஓர் ஒடுக்குமுறை வடிவம்தான் பெண் ஒடுக்குமுறை. பழமை வாதத்திலும். மூடநம்பிக்கை களிலும் எமது சமூக அமைப்பில் நீண்டகாலமாகப் பெண்ணினம் ஒடுக்கப்பட்டு வருகின்றது. எமது வேதாந்தங்களும், மத சித்தாந்தங்களும், மனுநீதி சாஸ்திரங்களும் அந்தக்காலந் தொட்டே பெண் அடிமைத்தனத்தை நியாயப்படுத்தி வந்திருக்கின்றன. ஆணாதிக்கம், சாதீயம், சீதனம் என்று பல்வேறு பரிமாணங்களில் இந்த ஒடுக்குமுறையானது பெண்களின் வாழ்க்கையை ஊடுருவி நிற்கிறது. அவர்களது வாழ்க்கையைச் சிதைத்து வருகிறது.... எமது சமூகத்தின் சனத்தொகையில் பெரும்பான்மை இடத்தை வகிக்கும் பெண்கள் தொடர்ந்தும் அடிமைத் தனத்தில் வாழ்ந்து வந்தால் எமது விடுதலைப் போராட்டத்தை ஒரு தேசியப் போராட்டமாக முன்னெடுப்பது கடினம்...

-**தோழர் பிரபாகரன்**, விடுதலைப்புலிகள் ஏடு மாசி - பங்குனி 1991

தமிழில் : யாழ்மொழி

# குழந்தைகளை மதமற்றவர்களாக வளர்ப்பதே சிறந்தது!




மதமற்ற குழந்தைகள்தான் ஆரோக்கியமான, ஒழுக்கமான வாழ்வை வாழ்கின்றனர் என்று அமெரிக்காவில் அண்மையில் நடத்தப்பட்ட பல ஆய்வுகளின் அறிக்கைகள் கூறுகின்றன. சமீபத்தில் லாஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ் ஏடு சக்கர்மேனால் (Zuckerman) எழுதப்பட்ட கட்டுரை ஒன்றை வெளியிட்டது.

பியூ ஆய்வின் (Pew Research) படி தங்களுக்கு எவ்விதமத அடையாளமும் இல்லை என்று வகைப்படுத்திக் கொள்ளும் அமெரிக்கக் குடும்பங்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. 1950-களில்4 சதவிகித்திலிருந்த மதமற்ற அமெரிக்கர்களின் எண்ணிக்கை தற்போது 23% ஆக உயர்ந்துள்ளது. இவ்வாறு நாத்திகம் வளர்ந்து வரும் சூழலில், மதமற்றவர்களாகக் குழந்தைகளை வளர்ப்பதன் நன்மைகளை ஆராய்ச்சியாளர்கள் ஆய்வுசெய்யத் தொடங்கினர்.

பல ஆய்வறிக்கைகள், “மதச்சார்பில்லாமல் குழந்தைகளை வளர்ப்பதே சிறந்தது” என்கின்றன. ஏனெனில் இனவாதம் மற்றும் சமூக அழுத்தத்திற்கு அவர்கள் எளிதில் ஆளாவதில்லை. பழிவாங்கும் எண்ணம், தேசியவாதம், ஆக்கிரோஷம், சர்வாதிகாரம் ஆகிய குணங்கள் அக்குழந்தைகளிடம் குறைவாகவே காணப்படுகின்றன. மதநம்பிக்கையுடைய பெரியவர்களைக் காட்டிலும் அதிக சகிப்புத்தன்மை கொண்டவர்களாக அக்குழந்தைகள் உள்ளனர் என்று முடிவுகள் வந்துள்ளன. நன்மைகளின் பட்டியல் இத்தோடு முடியவில்லை.

“மதமற்ற குடும்பங்கள்தான் குழந்தைகள் வளர்வதற்கு ஓர் நல்ல அடித்தளத்தை வழங்குகின்றன”, என்கிறார் தெற்கு கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தில் (University of Southern California) மூப்பியல் மற்றும் சமூகவியல் பேராசிரியராகப் பணிபுரியும் பெங்ஸ்டன். எங்கள் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மதநம்பிக்கையுடைய பெற்றோர்களைவிட மதமற்ற பெற்றோர்களே நன்னெறிக் கொள்களில் அதிகப்பிடிப்புடன் இருந்தனர். மதமற்ற பெற்றோர்களில் பலர் ஒழுக்கத்தோடு, இலக்குகள் நிறைந்த வாழ்க்கையை வாழ்கின்றனர், என்கிறார் பெங்ஸ்டன்.

போஸ்டன் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வின்படி, உண்மையில் இருந்து கற்பனையை வேறுபடுத்திப் பார்க்கும் திறன் மத நம்பிக்கையுடைய குழந்தைகளிடம் குறைவாகவே உள்ளது. எதார்த்தமான, மதக்கதைகளைக் குழந்தைகளிடம் கூறி, அது உண்மையா? அல்லது கற்பனையா? என்று கேட்டோம். மத நம்பிக்கையுள்ள குடும்பங்களில் வளரும் குழந்தைகள் அக்கதைகளில் வரும் கதா பாத்திரங்களை உண்மை என்று நம்பினர்; ஆனால் மதமற்ற குடும்பங்களில் வளரும் குழந்தைகள் அதைக் கற்பனைக் கதாபாத்திரமாகவே எண்ணினர்.

மேலும் “மதமற்றவர்களாக வளர்க்கப்படும் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களான பின்னர், அறிவியல் மனப்பான்மை உடையவர்களாகவும், பாலினசமத்துவம், ஓரினச்சேர்க்கை ஆகியவற்றை மதித்து ஆதரிப்பவர்களாகவும் உள்ளனர்” என்கிறார் சக்கர்மேன்.

**குறிப்பாக, மதச்சார்பில்லாதவர்கள் கூறும் ஒழுக்கத்திற்கான வரையறை என்பது என்னவென்றால், “நம்மைப் பிறர் எப்படி நடத்தவேண்டும் என்று நினைக்கிறோமோ, அவர்களை நாம் அப்படி நடத்துவது. அதற்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட எந்த நம்பிக்கைகளும் தேவையில்லை.”**

**இதைத்தான் மக்களைப் படித்த சமூகவிஞ்ஞானி பெரியாரும் ஒழுக்கத்தின் விளக்கமாகப் பல ஆண்டுகளுக்கு முன்பே கூறினார்!**

அதி அசுரன்

2

# அன்று மனுதர்மம் இன்று தமிழ்த்தேசியம்!

## தமிழ்த் தேசியஇன மாயை

விஞ்ஞானப்பூர்வமான(!) தேசிய இனவாதிகளின் தேசியஇன வரையறையை மீண்டும் நினைவு கொள்வோம். ஒரு பொதுமொழி, ஒரு பொதுப்பண்பாட்டில் வெளிப்படும் உளவியல் உருவாக்கம்,பொதுவான பொருளியல் வாழ்வு, தொடர்ச்சியான நிலப்பரப்பு ஆகிய நான்கு சிறப்புக்கூறுகள் ஒரு தேசியஇனத்துக்கு வேண்டும்.

அய்.நா. பொது அவையில் 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் நாள் பிரகடனப்படுத்தப்பட்ட அனைத்துலக மனிதஉரிமைப் பிரகடனத்தின் 15 ஆவது பிரிவு,

“தேசிய இன உரிமையைப்பெற ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. தேசிய இன உரிமையை எவரிடமிருந்தும் தன்னிச்சையாகப் பறித்துவிடக்கூடாது. தன் தேசிய இனத்தை மாற்றிக்கொள்ளும் உரிமையையும் எவருக்கும் மறுத்தல்கூடாது.”

என்று கூறுகிறது. ஒருவன் தனது தேசிய இனத்தையே மாற்றிக்கொள்ளலாம் என ஒரு நெகிழ்வுத் தன்மை கொண்டதாகவே அகில உலக மனிதஉரிமைப் பிரகடனங்கள் உள்ளன. அந்த நெகிழ்வுத்தன்மையை இங்குள்ள தமிழ்த்தேசியர்கள் எதிரியான பார்ப்பானை உள்ளே நுழைப்பதற்கு மட்டுமே பயன்படுத்துகின்றனர். பார்ப்பனர்களால் ஒடுக்கப்படும், சுரண்டப் படும் மக்களை ஒருங்கிணைக்க நெகிழ்வுத்தன்மைகளைப் பயன்படுத்துவதில்லை. அவர்களது முறையிலேயே விஞ்ஞானப்பூர்வ தேசியஇனவாதிகளின் வழியிலேயே நாமும் கட்டுத்திட்டமாக, கறாராக தேசியஇன வரையறையை தமிழ்இனத்துக்குப் பொருத்திப் பார்த்தால் தேசிய இனம் என்ற சட்டகம் (Frame) தமிழனுக்குப் பொருந்தாமல் இருப்பதைக் காணலாம். தமிழ்தேசியம் என்பதே மாயை என்பதை உணரலாம்.

பெரியார் தொடங்கி வைத்த ஆரிய எதிர்ப்புப் பண்பாட்டுப்புரட்சி - திராவிடர் பண்பாட்டுப் புரட்சிதான் தற்போதைய அவசியத்தேவை. ஒரு தனி தேசிய இனமாக தமிழன் மாறவேண்டுமானால், பெரியாரின் திராவிடர் பண்பாட்டை வளர்த்தெடுப்பதில் தான் கவனம் செலுத்தியாக வேண்டும். தேசிய இனக்கருத்தாக்கம் என்பது தமிழ்த்தேசியத்துக்குப் பொருந்தாமல் மாயையாக இருப்பது தவறில்லை. நவீன மனுதர்மமாக மாறி வருவதைத்தான் தவறு என்கிறோம்.

**பொதுமொழியை வைத்து தமிழனை எப்படி அடையாளம் காண்பீர்கள்?**

மொழியின் அடிப்படையில் தமிழனை அடையாளங்காணத் தொடங்கினால்,ஒடுக்கும் பார்ப்பான் தமிழனாக வந்துவிடுவான். ஒடுக்கப் படும் இஸ்லாமியர்கள் வெளியே நிற்பார்கள். ஆதிக்கத்தின் உச்சியில் இருக்கும் ஆரியர்கள் தம்மை அந்தணர் எனக் கூறிக்கொண்டு உள்ளே வந்துவிடுவர். ஆரிய அடக்குமுறையால் மிகக் கடுமையாக நசுக்கப்படும் இலட்சக்கணக்கான தாழ்த்தப்பட்ட தோழர்கள் வெளியே நிற்பர். தமிழ்நாட்டில் அய்யரும் அய்யங்காரும், கேரளாவில் நம்பூதிரியும், கர்நாடகாவில் ஹெக்டேயும், வங்காளத்தில் முகர்ஜியும் அந்தந்த தேசியஇனங்களின் மொழியைப் பேசி அந்தந்த இனங்களின் ஆதிக்க சக்தியாக கேள்வி கேட்பாரில்லாமல் சுகமாய் வாழ்வான்.

உலகில் எந்த மனிதனும் பேச்சுவழக்கில் பயன்படுத்தாத சமஸ்கிருதம் செம்மொழியாக அறிவிக்கப்பட்டு கோடிக்கணக்கான பணம் அம்மொழியின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்ட நிலை தொடரும். சமஸ்கிருதப் பண்பாடும் தொடரும்.

இங்கு பல நூற்றாண்டுகளாக இருக்கும் ஒடுக்குமுறை சிறிதும் மாற்றமின்றித் தொடரவே செய்யும். அடியன், அரநாடன், இருளர், ஊராளி, எரவல்லன், கணியான், காணிக்காரன், குடியர், குறிச்சன், கும்பர், குறுமன், கொச்சு வேலன், சோளகர், தொதவர், பள்ளியன், பள்ளேயன், பளியர், மலைக் குறவன், மலைப் பண்டாரம், மலையக் கண்டி, மலை வேடன், மன்னான், முதுவன், முடுகர் என தமிழகத்தில் 36 வகையான பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். இதில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மொழியைப் பேசக்கூடியவர்கள். 2001-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழக பழங்குடிகள் தமிழ்நாட்டு மக்கள் தொகையில் 3.5 சதவீதம் ஆகும். இவர்கள் தமிழ்மொழிக்குப் பதிலாக, தங்களது தாய்மொழியிலேயே பாடங்களும், வகுப்புகளும் நடத்தப்பட வேண்டும் என்று ஒரு கோரிக்கையை வைத்துள்ளனர். தமிழ் பேசாத - தங்களுக்கென்று தனித் தனி மொழிகளைக் கொண்ட - தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்தப் பழங்குடி மக்களை எந்த தேசிய இனத்தில் இணைப்பீர்கள்?

எந்தத் தமிழை அடிப்படையாக வைத்துள்ளீர்கள்? ஈழத்தமிழா? சென்னைத் தமிழா? மதுரைத் தமிழா? கொங்குத்தமிழா? நெல்லைத்தமிழா? இவை எல்லாவற்றிற்கும் எதிராக வழங்கும் பார்ப்பனத் தமிழா? ஐரோப்பிய நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் அடுத்த தலைமுறையான ஆயிரக்கணக்கானோருக்கு தமிழ்மொழி சுத்தமாகத் தெரியாது. பேசவோ, எழுதவோ, படிக்கவோ தெரியாது. பண்பாட்டு விழாக்களுக்காக தமிழ்நாட்டிலிருந்து ஐரோப்பா செல்லும் தமிழ்த் தலைவர்கள் கூட கூட்டங்களில் ஆங்கிலத்தில் பேசித்தான் ஈழவிடுதலைக் கருத்துக்களுக்கு அழுத்தம்தர வேண்டியுள்ளது. தமிழே தெரியாத ஐரோப்பா வாழ் தமிழர்களை எந்த இனத்தில் இணைப்பீர்கள்?

தமிழ் நாட்டில் வாழும் தமிழனும் “தமிழ்பேசு; தங்கக்காசு” என்னும் நிகழ்ச்சிகள் நடத்தினால் தான் தமிழ் பேசுவது என்ற நிலையில் தமிழ்பேசுகிறான். இப்படி அரை குறையாகத் தமிழைப் பேசுபவர்களையும் தமிழனாக ஏற்றுக் கொள்வீர்களா? தேவிகுளம், பீர்மேடு, இடுக்கி பகுதிகளிலுள்ள மக்கள் எல்லாம் வீட்டில் தமிழும், வெளியில் மலையாளமும் பேசித்தான் வாழ்கின்றனர். அடுத்தடுத்த தலைமுறைகள் மலையாளம் மட்டுமே பேசுகின்றனர். இந்த கேரளத் தமிழர்களை எந்த இனத்தில் இணைப்பீர்கள்? தமிழை அடிப்படையாக வைத்து தமிழர்களை முழுமையாகவும், தமிழர்களுக்கு எதிரிகளான பார்ப்பனர்களை பிரித்தும் தேசியஇன வரையறையை உறுதிப் படுத்த முடியுமா? அப்படிச் செய்தாலும் தேசியஇனம் என்ற சட்டகம் (Frame) இங்கே மாயையாக, பொருந்தாமல்தானே போகும்.

ஒரு பொதுப்பண்பாட்டில் வெளிப்படும் உளவியல் உருவாக்கம்

இதுவும் மாயையானதுதான். இங்கு தமிழர்களுக்கென்று என்ன பொதுப்பண்பாடு இருக்கிறது? ஜாதிக் கொரு பண்பாடுதானே இருக்கிறது? ஒவ்வொரு ஜாதியினராலும் தனித்தனி பழக்க வழக்கங்கள் கடைபிடிக்கப்படுகின்றன. அந்த ஜாதியின் பண்பாடுகள் யாராலும் மீறப்படாமல் மனுதர்மச் சட்டங்கள் பாதுகாக்கின்றன. உணவு உண்பது, கழிவை வெளியேற்றுவது என்ற உலக மனித இனங்களுக்குப் பொதுவானவைகளைத் தவிர மற்ற பழக்கவழக்கங்களை ஜாதியும் மதமும்தான் நிர்ணயிக்கின்றன. ஒவ்வொரு ஜாதியும் இங்கு ஒவ்வொரு தேசியஇனங்களாகத்தான் இயங்குகின்றன. உணவுமுறை, உணவு உண்ணும் முறை, உடை, உடை உடுத்தும் முறை, இருப்பிடம், இருப்பிடங்கள் இருக்க வேண்டிய முறை, ஊர், ஊர்கள் அமைய வேண்டிய முறை, ஊர்மக்கள் - சேரி மக்கள், இருவகை மக்களிலும் ஆண்கள், பெண்களுக்கென்று தனித்தனியான பழக்க வழக்கங்கள் என ஒவ்வொரு அணுவையும் நிர்ணயிப்பது இந்துமதமும், ஜாதியும் தான். இவை உருவாக்கும் உளவியல் உருவாக்கம் தேசியஇன இலக்கணங்களுக்கு பொருந்துமா?

ஒருவனது வாழ்வில் மிக முக்கியமான நிகழ்வான திருமணம் தமிழர் முறையிலா நடக்கிறது? செம்புலப் பெயல்நீர் போல ஜாதியும், மதமும், பணமும் கலந்த ஆரியமுறைத் திருமணங்கள் தானே நடக்கின்றன. ஜாதி பார்த்து, மதம் பார்த்து, ஜாதிக்குள்ளேயே குலம், கோத்திரம், மாமன் மச்சான் முறைகள் பார்த்து, பார்ப்பான் குறித்துக் கொடுக்கும் சுபமுகூர்த்த நன்நாளில் திதி, நட்சத்திரம் பார்த்து பார்ப்பானை வைத்து சமஸ்கிருத மந்திரங்கள் ஓதப்பட்டு, தாலி கட்டப்பட்டு, கன்னிகாதானம் நடக்கிறது. நாள் குறிப்பதிலிருந்து தாலிகட்டுவது வரை, சாந்தி முகூர்த்தம் என்பது வரை எது தமிழ்ப் பண்பாடு?

கடுமையாக உழைத்து சிறுகச்சிறுகச் சேமித்தோ, வங்கிகளில் கடன்பட்டோ சிறிய அளவில் ஒரு வீட்டைக் கட்டும் சராசரித் தமிழனோ அல்லது இந்தியா முழுமைக்கும் வட்டிக்குவிட்டு மற்ற தேசிய இனங்களைச்

சுரண்டி தமிழ்நாட்டில் கோடிக்கணக்கான செலவில் அரண்மனைகளைக் கட்டும் தமிழனோ யாராக இருந்தாலும் வாஸ்து முறையில் அளவு பார்த்து, வாஸ்து முறையிலோ கதவு, ஜன்னல்கள்கள் வைத்து, வாஸ்து சாஸ்த்திரத்தின்படி வண்ணமும் பூசி வழக்கம்போல பார்ப்பான் சொல்லும் சுபமுகூர்த்த நன்நாளில் பசுமாட்டை உள்ளேவிட்டு க்ரானைட் தரையில் சிறுநீர் ( சிறு நீரா, பெரு நீரா) கழிக்கச்செய்து, நெருப்பை வளர்த்து, நெருப்பின் முன் வீட்டைக் கட்டியவரை உட்கார வைத்து அந்த மாட்டு மூத்திரத்தை முகத்தில் அடித்து, பொன்னையும் பொருளையும் பெருமளவில் பிடிங்கிச் செல்கிறான் பார்ப்பான். இதில் எது தமிழ்ப் பண்பாடு?

செத்துப்போனாலும் ஒவ்வொரு ஜாதிக்கென்று தனித்தனியாக சடங்குகள், சம்பிரதாயங்கள், சுடுகாடு போனாலும் ஜாதிக்கொரு சுடுகாடு, மின்சார சுடுகாட்டுக்குப் போனாலும் அங்கேயும் ஜாதி, மதச் சடங்குகள், புதைக்கப்பட்ட பிறகோ, எரிக்கப்பட்ட பிறகோகூட விட்டுத் தொலையாமல் கருமாதி, 30 ஆம் நாள், திதி, திவசம் என்று தொடர் கொள்ளையடிக்கிறான் பார்ப்பான். இதில் எது தமிழ்ப்பண்பாடு? தமிழன் மட்டுமல்ல, இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலுமுள்ள ஒடுக்கப் படும் தேசிய இனங்கள் அனைத்துமே தமது வாழ்வின் பல்வேறு நிலைகளில் ஆரியப் பண்பாட்டைத்தான் கடைபிடிக்கிறார்கள்.

அகில உலக மனித உரிமைப் பிரகடனங்கள் தேசிய இனத்தையே மாற்றிக்கொள்ளலாம் என நெகிழ்வுப் போக்கில் சென்றாலும், தமிழ்நாட்டில் இந்துமதத்தில் ஜாதி மாறமுடியுமா? நேற்றுவரை நான் பறையன்; நாளையிலிருந்து படையாச்சி யாகவோ, தேவராகவோ, சைவப்பிள்ளை யாகவோ மாறிக்கொள்கிறேன் பிள்ளைமார் களின் பண்பாட்டைப் பின்பற்றிக்கொள்கிறேன்; படையாச்சியின் பண்பாட்டைப் பின்பற்றிக் கொள்கிறேன் என்றால் மேற்கண்ட பிற்படுத்தப் பட்ட ஜாதியினர் அதை ஏற்றுக்கொண்டு பறையர்களைப் பிற்படுத்தப்பட்டவர்களாக ஏற்றுக்கொள்வார்களா? அல்லது ஜாதி கடந்து தமிழனாக மாறிவிடுகிறேன். தமிழ்ப் பண் பாட்டைக் கடைபிடிக்கிறேன் என்று அறிவுப் பூர்வமாகச் சொல்வதாக வைத்துக்கொள்வோம். அந்த கன்வெர்ட்டட் தமிழன் கடைபிடிக்க தமிழ்ப்பண்பாடு என்று என்ன இருக்கிறது? நமக்கு கிடைத்த விழாக்கள், நமது இலக்கியங்கள், நமது மொழி, பண்பாடு, நமது அரசியல் அனைத்தும் பார்ப்பனமயமாகவும் இந்திய மயமாகவும்தானே இருக்கின்றன. "பொதுப்பண்பாட்டில் வெளிப்படும் உளவியல் உருவாக்கம்" என்பது தமிழனைப் பொறுத்த வரையில் ஜாதிக்கொரு பண்பாடாகவும், மதப்பண்பாடாகவும்தான் இருக்கிறது. தமிழ்த்தேசியஇனம் என்கிற சட்டகம் இங்கும் இடிக்கிறது.

### பொதுவான பொருளியல் வாழ்வு

ஒட்டுமொத்த சமுதாயமே ஆரியமய மாகிவிட்ட பிறகு பொருளியல் மட்டும் தனியாக எங்கே பொதுப்பண்பைக் காட்டப்போகின்றது? தமிழனின் பொருளியலையும் அரசியலையும் நிர்ணயிப்பது இந்துமதமும், ஜாதியும், இந்திய தேசிய - பார்ப்பன நலன்களும் தான். தற்போது புதிய மாற்றமாக பன்னாட்டு நிறுவனங்களும், பன்னாட்டு நிதியங்களும் நிர்ணயிக்கும் இடத்தில் இருக்கின்றன. இவையும்கூட பார்ப்பன நலன் களுக்கு எதிராக எதையும் இந்தியாவில் செய்துவிட இயலாது. உயிரைப் பணையம் வைத்து ஆழ்கடல் சென்று மீன்பிடித்து வாழும் நெய்தல் நில பரதவருக்கும், ஆயிரக் கணக்கான வேலி நிலங்களை கையகப்படுத்தி வாழும் மருதநில மூப்பனார்களுக்கும் பொதுவான பொருளியல் வாழ்வு எப்படி இருக்கமுடியும்? அப்படிப் பொதுவாக இருக்கிறது என்று எதையாவது காட்ட முனைந்தால் அது அவசியம் பார்ப்பன - இந்தியதேசிய பொருளியலாகத் தான் இருக்கும். தமிழ்த்தேசியஇனம் என்பதற்கான பொதுவான பொருளியல் என்று எதுமில்லை.

### தொடர்ச்சியான நிலப்பரப்பு

தற்போது விஞ்ஞானப்பூர்வ தமிழ்த் தேசியர்களால் அடையாளப்படுத்தப்படும் தமிழ்நாடு 1953 க்குப் பின்னால் காங்கிரஸ் - பார்ப்பன - இந்தியதேசிய முதலைகளால் குறித்துக்கொடுக்கப்பட்ட நிலப்பகுதியாகும். பார்ப்பான் அவனுக்கு இடைஞ்சல் இல்லாமல் பிரித்துக்கொடுத்த பகுதிகளை அடிப்படையாக வைத்துத்தான் தேசிய இன அரசு முழக்கத்தை வைக்கிறார்கள். இந்திய தேசியவாதிகளால் கேரளப்பகுதிக்குப் பிரித்துத்தரப்பட்ட தேவி குளம், பீர்மேடு, இடுக்கி போன்ற பகுதிகளை மீட்க வேண்டும் என்று சில குழுக்களும், திருப்பதியை மீட்கவேண்டும் என்று சில குழுக்களும், பெங்களூரையும், மைசூரையும், கோலாரையும் மீட்க வேண்டும் என்று சில குழுக்களும் இவை எல்லா வற்றையும் சேர்த்து மீட்க வேண்டும் என்றுசில குழுக்களும் எழுதியும் பேசியும் வருகின்றன.

பெரியார் எல்லைப்போராட்டத்திலும், மேற்கண்ட பகுதிகள் கேரளாவோடு போனபோதும் போராடவில்லை என்று குற்றம் சாட்டுகிறார்கள் சில தமிழ்த்தேசியர்கள். மொழிவாரி மாகாணப்பிரிவினையில் முழுமையான வெற்றிபெறுவதற்கு ம.பொ.சி போன்ற மதவாதிகள்தான் தடையாக இருந்திருக்கிறார்கள் என்பதை ம.பொ.சி உயிரோடு இருக்கும்போதே பெரியார் விளக்கி விட்டார். அதோடு நான் விடுதலைக்குத் தான் போராடுகிறேன். விஸ்தீரணத்துக்குப் (பரப்பளவுக்கு) போராடவில்லை என வெளிப் படையாகவே அறிவித்தார். எல்லைகளைப் பொறுத்த வரையும் தேசியஇனப்பரப்புகள் குறித்தும் பெரியாரின் பார்வை இது:

நான் மலையாளிகள் போவதற்கு முன்பே "மலையாளி வேண்டாம்" என்கிறவன். ஆகவே எனக்கு உரிமை உள்ள எல்லை வரையில் இருக்கும் தமிழ்நாடு (மதராசை) சொன்னேன். அதாவது மதராஸ் மாகாணம் என்றுதான் அப்போது சொன்னேன். பிறகு அந்தந்த நாட்டுக்காரன் பிரிந்ததும் எல்லை குறைந்து விட்டது. இப்போது எந்த எல்லையுள்ளதோ அந்த எல்லை வரையில் உள்ள மதராசைத்தான் கேட்கிறேன். முன்பு நாகர்கோயில் மலையாள இராஜ்ஜியத்தோடு (திருவாங்கூரோடு) சேர்ந்திருந்தது. நாகர் கோயிலுக்குப் போய் மலையாள ஆதிக்கத்தை எதிர்த்தே கண்டித்து வந்தேன்.

பிறகு இப்போது நாகர் கோயில் தமிழ்நாட்டோடு சேர்ந்து விட்டதும் போன மாதம் போய் பத்து நாள்களுக்குமேல் அங்கே சுற்றுப்பிரச்சாரமே பண்ணி னோம். நீங்களும், நாங்களும் ஒன்று. இப்போது ஒரு நாட்டார் ஆகிவிட்டோம். ஆதலால் தமிழ்நாடு அல்லது மதராஸ் சுதந்திரம் பெற வேண்டும் என்று கூறினேன். இதில் என்ன தப்பு? இதிலே என்ன பல்டியடிக்கிறது இருக்கிறது? நாளைக்கு இந்த திருநெல்வேலி, மதுரை, கன்னியாகுமரி தமிழ்நாட்டை விட்டு நீங்கிவிட்டால் இவை நீங்கிய மற்றதைத்தானே கேட்பேன்! ஏன் மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரியை விட்டு பல்டி அடிக்கிறாய் என்றால் அவனுக்கு அறிவு இருக்கிறது என்று சொல்லலாமா?

-பெரியார் - "விடுதலை" 27-1-1959

இந்தப் பிரச்சனைகளில் நேர்மையாகப் போராடுகிறவர்கள் என்ன நிலை எடுக்க வேண்டும்? தமிழ்த் தேசிய இனத்துக்கு உரிய எல்லைகள் எது என்பதை முதலில் முடிவு செய்ய வேண்டும். அந்த எல்லைகளை மீட்கப் போராடவேண்டும். இரண்டையுமே செய்யாமல் அந்த எல்லைப் பிரச்சனை எங்களுக்கு வேண்டிய தில்லை என்று ஒதுங்கிக்கொள்பவர்களிடம் சண்டையிட்டுக்கொண்டே காலத்தைக் கழித்துக் கொண்டிருப் பதில் என்ன நேர்மை இருக்கிறது? முதலில் உங்கள் கடமையைத் தொடங்குங்கள்.

தமிழ்தேசிய இனத்தின் எல்லை 1953 இல் இந்திய தேசியம் அறிவித்த அளவுதானா? நாம் படித்த வரலாறுகளில் சேரநாடு, பாண்டியப் பேரரசு, சோழப்பேரரசு, பல்லவப்பேரரசு என்றுதான் படித்திருக்கிறோம். தமிழ்ப்பேரரசு என்றோ, தமிழ்நாடு என்றோ உலகில் எந்த நாட்டையும் நாம் இதுவரை படித்திருக்க மாட்டோம். இந்தியாவில் இருந்ததாகச் சொல்லப்படும் 56 தேசத்திலும், 562 குறுநில அரசுகளிலும் எதிலுமே என்றுமே எங்குமே தமிழ்நாடு என்ற பெயரில் ஒருநாடுகூட, ஒரு சமஸ்தானம்கூட இருந்ததில்லை. அந்த சேர, சோழ, பாண்டியப் பேரரசுகளின் எல்லைகளும், நிலப்பரப்புகளும் அவ்வப்போது மாறிமாறி வந்தள்ளன. ஒரு 25 வருடம்கூட தொடர்ச்சியாக மூவேந்தர்களின் எந்தப்பேரரசும் எல்லையை மாற்றாமல் இருந்திருக்க வாய்ப்பே இல்லை.

தொல்காப்பியத்துக்குப் பாயிரம் எழுதிய பனம்பரனார் "வடவேங்கடம் தென்குமரி, யாயிடைத், தமிழ்கூறுநல்லகத்து" என்று குறிப்பிடுகிறார். அதாவது வடக்கேயுள்ள வேங்கடமலையிலிருந்து தெற்கே குமரி வரை தமிழர் அரசுகளின் எல்லை இருந்திருக்கிறது. பத்துப்பாட்டின் பாயிரத்தில் "இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்க" என்ற வரிகள் இருக்கிறது. அதாவது முப்புறமும் கடலையே எல்லையாகக் கொண்டவன் என சேர மன்னனைப் பாடுகிறது. எனவே எல்லைப் போராளிகளும் விஞ்ஞானப்பூர்வ தேசியஇன வாதிகளும் தமிழ்த்தேசிய எல்லையாக வங்காள விரிகுடா, இந்தியப் பெருங்கடல், அரபிக்கடல் ஆகிய மூன்றுக்கும் நடுவே உள்ள நிலப்பகுதி என்றுதான் தொடங்கியிருக்கவேண்டும். அரபிக் கடலில் இருக்கும் மாலத்தீவு, இலட்சத் தீவுகளும் சங்ககாலத்தில் தமிழர் வாழ்ந்த பகுதிகளாகத் தான் இருந்தன என்று இலக்கியங்கள் கூறுகின்றன. "முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம்" என்றுதான் அவை அழைக்கப்பட்டன. "கன்னித்தென்கரைக் கடற்பழந்தீபம்" என்று அகத்தியசூத்திரம் சொல்வதும் இந்த மாலத்தீவு, இலட்சத்தீவுகளைத்தான். எனவே அவற்றையும் சேர்த்துத் தான் தமிழ்த்தேசிய எல்லையைத் திட்டமிடவேண்டும்.

இவ்வளவு பெரிய பரப்பு தமிழர்களின் பரப்பு என்பதை திட்டமிட்டு மறைக்கும்விதமாக ஏதோ ஓரிரு மாவட்டங்களான தேவிகுளம், பீர்மேடை மட்டும் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டே அதுவும் கேட்டுக் கொண்டே இருப்பது ஏன்? இந்தியாவால் பிடுங்கப்பட்ட அந்த ஊர்கள் இன்னும் இருக்கின்றதல்லவா?

பூகம்பத்தில் மூழ்கிவிடவில்லையே? பிறகென்ன இந்திய அரசாங்கத்தோடு போராடிப் பெற வேண்டியதுதானே? இந்திய அரசை எப்படி எதிர்ப்பது? மேலும் அதற்கெல்லாம் அங்கிருக்கும் மக்களின் ஆதரவும் வேண்டு மல்லவா? கொஞ்சம் சிக்கல்தான். முக்கடலையும் எல்லையாக அறிவிக்க முடியாததற்கு அப்பகுதிகளிலெல்லாம் தற்போது தமிழர்கள் வாழவில்லை என்றுகூட ஒரு பதிலைச் சொல்லலாம். ஆனால் ஈழத்தில்? தமிழ்ஈழத்தை தமிழ்த்தேசிய எல்லைக்குள் கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனால் ஈழத்தமிழர்கள் தமிழீழதேசியம் என்று தனியாகப்பிரித்துக் கொண்டார்கள். எனவே அதுவும் முடியாது.

மலேசியநாடும், சிங்கபுரம் என்ற சிங்கப்பூர் நாடும் 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழர்களின் ஆளுகைக்கு உட்பட்டு இருந்திருக் கிறது. இன்றும் அந்த நாடுகளில் தமிழர்கள் தமிழ்நாட்டைவிடச் சிறப்பாக வாழ்கிறார்கள். அவற்றையும் தமிழ்த்தேசிய எல்லையில் இணைக்கவேண்டும்.

வியட்நாமில்கூட கி.மு 1 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 2 ஆம் நூற்றாண்டு வரை ஸ்ரீமாறன் பாண்டியன் என்ற தமிழ்மன்னன் ஆண்டிருக்கிறான். கி.பி.10 ஆம் நூற்றாண்டு வரை தமிழர்கள் அதிகாரத்தில் இருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. மாறன்மாதேயம் என்றழைக்கப்பட்ட பர்மாவில் 1 ஆம் நூற்றாண் டிலிருந்தே பாண்டியர் ஆண்டதற்கான சான்றுகள் உள்ளன. சயாம் என்றழைக்கப்பட்ட தாய்லாந்தில் மன்னர்களின் முடிசூட்டுவிழாவில் கூட தேவாரமும், திருவாசகமும் பார்ப்பனர் களால் பாடப்பட்டுத்தான் விழாச் சடங்குகள் நடத்தப்பட்டன. புறநானூற்றுப் பாடலில் பாடப்பெற்ற கவுண்ணியன் விண்ணத்தாயன் என்ற பார்ப்பான் கி.பி.1 ஆம் நூற்றாண்டிலேயே அங்குசென்று தமிழர்(!) ஆட்சியை நிறுவினான் என்று வரலாறுகள் கூறுகின்றன. மிக முக்கியமாக நான்கு இனக் கூட்டணியில் கருவான பிற்காலச் சோழர்கள் மேற்கண்ட அனைத்து நாடுகளையும் ஆண்டிருக்கிறார்கள். அவை சோழப்பேரரசாக இருந்திருக்கின்றன. சில சமயம் பாண்டியப் பேரரசாகவும், சேரநாடுகளாகவும் இருந்திருக்கின்றன.

எனவே தமிழ்த்தேசிய இன எல்லைப்பரப்பு மேற்கண்ட நாடுகளை எல்லாம் இணைத்தே அறிவிக்கப்பட வேண்டும். அகண்ட தமிழ்க் குடியரசாக அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும். சேர, சோழ, பாண்டியப் பேரரசுகளின் எல்லை களை இராஜராஜசோழனின் பேரன்களே சுரக்கலாமா?

தமிழ்த்தேசிய அமைப்புகள் வெளியிட்டிருக்கும் எந்த தமிழ்நாட்டு வரை படத்திலும் மேற்கண்ட நாடுகளின் வரை படங்கள் இணைக்கப்படவில்லையே ஏன்? காலத்துக்கேற்றபடி, எதார்த்தநிலைக்கு ஏற்றபடி ஒரு தேசியஇனத்தின் நிலப்பரப்பு எல்லையை மாற்றிக் கொள்ளலாமா? மாற்றிக்கொள்ளலாம் என்றால் விஞ்ஞானப்பூர்வ தேசியஇன வரையறை என்ன ஆனது?

இப்படி மொழி அடிப்படையிலோ, பொதுவான பண்பாட்டில் வெளிப்படும் உளவியல் உருவாக்கம், பொதுவான பொருளியல் வாழ்வு, தொடர்ச்சியான நிலப்பரப்பு என எதிலுமே தமிழ்த்தேசியர்கள் மூச்சுக்குமூச்சு முழங்கிக் கொண்டிருக்கும் “சமூகம் நிர்ணயித்த வரையறைகளையும், இனம், தேசிய இனம், தேசம் என்பவற்றுக்கான ஐரோப்பியர்களின் வரையறை களையும்” தத்தம் வசதிகளுக்கு ஏற்ப, சூழலுக்கு ஏற்ப மாற்றியுள்ளனர். ஐரோப்பியர்களின் சட்டகங்களை அப்பட்டமாக மீறியுள்ளனர். இதை நாம் வரவேற்கிறோம். இந்த நெகிழ்வுத் தன்மையை பெரியார் தமிழர்களின் இன எதிரியை வெளியேற்றுவதற்குப் பயன்படுத்திக் கொண்டார். திராவிடர் என்ற கருத்தியலை நிறுவினார்.

**திராவிடர் என்பதற்கு பெரியார் தரும் வரையறை:**

**முஸ்லீம்களும் கிறிஸ்துவர்களும். தாழ்த்தப்பட்ட மக்களும், தங்களை ஆரியர் என்று சொல்லிக் கொள்ளும் பாப்பனர் அல்லாத மற்ற இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களும் ஆகிய எல்லோரும் திராவிடர்கள் என்ற தலைப்பின் கீழ் வருவார்கள்”.** *குடிஅரசு - 26-11-1939*

இவ்வாறு விலக்க வேண்டியவர்களை விலக்கி, இணைக்கவேண்டியவர்களை திராவிடராக இணைத்தார் பெரியார். ஆனால் தமிழ்த் தேசியர்கள் தமிழர்களின் இன எதிரியை தமிழர்களோடு இணைத்துக் கொள்ளவும்- ஆரியச் சுரண்டலும் இந்திய தேசியச் சுரண்டலும் தங்கு தடையின்றித் தொடரவும் இந்த நெகிழ்வுப் போக்குகளைப் பயன்படுத்துகின்றனர். பெரியார் தொடங்கி வைத்த ஆரிய எதிர்ப்புப் பண் பாட்டுப்புரட்சி-திராவிடர் பண்பாட்டுப் புரட்சிதான் தற்போதைய அவசியத் தேவை. ஒரு தனி தேசிய இனமாக தமிழன் மாறவேண்டு மானால், பெரியாரின் திராவிடர் பண்பாட்டை வளர்த்தெடுப்பதில்தான் கவனம் செலுத்தியாக வேண்டும். தேசிய இனக்கருத்தாக்கம் என்பது தமிழ்த் தேசியத்துக்குப் பொருந்தாமல் மாயை யாக இருப்பது தவறில்லை. நவீன மனுதர்மமாக மாறி வருவதைத்தான் தவறு என்கிறோம்.



# கருந்திணை ஒன்றுகூடல்

## வழிகாட்டும் பண்பாட்டு நடவடிக்கைகளோடு

**நாங்கள் ஜாதிகடந்த காதலர்கள்!**

**நாங்கள் இணைந்து வாழ்கிறோம்!**

**நாங்கள் மணவாழ்விலும் மகிழ்வுடன் வாழ்கிறோம்!**

**"ஜாதி உறவுகளைக்கடந்து, தோழமை உறவுகளோடு கைகோர்த்து, அறிவியல் பண்பாட்டை நடைமுறைப்படுத்த விழையும் குடும்பங்கள் - காதல் இணையர் - சேர்ந்துவாழும் இணையர் - தனித்த வாழும் பெண், திருநங்கை, திருநம்பி, ஆண் அனைவருக்குமான உற்சாக ஒன்றுகூடல்"** என கருந்திணை பண்பாட்டு அமைப்பு அழைப்புவிடுத்தது. 2015 பிப்ரவரி 14 ஆம் நாள் காதலர் நாளில் கருந்திணை ஒன்றுகூடல் திண்டுக்கல்லில் நடைபெற்றது. காதலர்கள், மணவாழ்வில் மகிழ்வுடன் வாழும் காதலர்கள், இணைந்து வாழும் காதலர்கள், களப்பணியாளர்கள், தோழர்கள், குழந்தைகள், அடுத்த தலைமுறையினர் என அனைத்துத் தரப்பினரும் கருந்திணைக் குடும்பத்தின் தலைவர் தோழர் கொளத்தூர் மணி தலைமையில் ஒன்றுகூடினர்.

முதல்நிகழ்வாக காதலர் நாள் விழா கேக் வெட்டும் நிகழ்ச்சி தொடங்கியது. காதலர்களின் சார்பாக தோழர்கள் கோவை இசைமதி - கிணத்துக்கடவு நிர்மல், இணைந்துவாழும் காதலர்கள் சார்பாக திருப்பூர் வேணி - திண்டுக்கல் இராவணன், காதலித்து மணவாழ்வில் மகிழ்வுடன் வாழும் காதலர்கள் சார்பாக திருச்சி புரட்சிக்கொடி - திண்டுக்கல் தாமரைக்கண்ணன் ஆகியோர் கேக் வெட்டி கொண்டாட்டங்களைத் தொடங்கி வைத்தனர். இந்த மூன்று இணையர்களும் ஜாதிகடந்து காதலிப்பவர்கள். ஜாதிமறுப்புக் காதலர்கள்.

ஒன்றுகூடலில் தோழர்கள் திருப்பூர் வேணி திண்டுக்கல் இராவணன் ஆகிய இருவரும் நாங்கள் இருவரும் இன்று முதல் இணைந்து வாழப்போகிறோம் ( Living Together or Companionship) என்று அறிவித்தனர். சுயமரியாதைக் காலத்தில் சுயமரியாதை மாநாடுகளில் ஜாதிமறுப்புத்திருமணம், குழந்தை குட்டிகளுடன் திருமணம், தாலி மற்றும் சடங்குகள் மறுப்புத் திருமணம், மறுமணம் என ஆயிரக்கணக்கான புரட்சிகரத் திருமணங்கள் நடைபெற்றிருக்கின்றன. திராவிடர் இயக்க மாநாடுகளில் இதுபோன்ற பண்பாட்டுப் புரட்சிகள் நடந்தவண்ணம் இருந்தன. இந்தப் பண்பாட்டுப் புரட்சியை அடுத்தகட்டத்துக்கு நகர்த்தும் நோக்கத்தில் திருமணம் என்ற சடங்கையும் தவிர்த்து, 'இணைந்து வாழ்தல்' என்று முடிவெடுத்து, அதை எளிமையாகவும், எந்தச் செலவுமின்றியும், முன்மாதிரியாகவும் ஒரு அறிவிப்போடு முடித்துக்கொண்டனர் வேணியும், இராவணனும். அடுத்த தலைமுறையினர் பின்பற்றவேண்டிய இதுபோன்ற பண்பாட்டு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதே கருந்திணைப் பண்பாட்டின் நோக்கம்.

இந்த இரண்டு நாள் நிகழ்வில் தோழர் கொளத்தூர் மணி அவர்களது உரை திருமணம் குறித்த திராவிடர் இயக்கத்திற்கான ஆவணம் போல அமைந்திருந்தது. திருமணமுறை தோன்றிய விதம், சங்ககாலத் திருமணங்கள், ஆரியர் திருமண முறைகள், ஆரியப் பண்பாட்டுக்கு எதிரான திராவிடர் மணமுறைகள் ஆகியவை குறித்து விரிவாக விளக்கினார். பெரியார் காலத்தில், கழகத்தின் முக்கியத் தளபதிகளே, அவர்களது வீடுகளில் சொந்த ஜாதிக்குள் திருமணங்களை ஏற்பாடு



செய்தபோது கடும் கண்டனத்தைத் தெரிவித்தார். அவர்களைக் கண்டித்து அவற்றை மாற்றி ஜாதி மறுப்புத் திருமணங்களாக நடத்தச் செய்தார் என்ற செய்தியை பல சான்றுகளுடன் விளக்கினார். எதிர்காலத்திருமணங்கள் ஜாதிமறுப்புத்திருமணங்களாகவே இருக்கவேண்டும் அல்லது ஒப்பந்த முறை மணங்கள், இணைந்து வாழ்தல் போன்றவையே நமது இலக்குகளாக இருக்க வேண்டும் என்றார்.

பிற்பகலில் கருந்திணைக் குடும்பத்தினர் அனைவரும் தங்களைப் பற்றி மிகவும் விரிவாக அறிமுகம் செய்து கொண்டனர். தங்களது தொழில், தங்களது பொதுவாழ்க்கை அனுபவங்கள், காதல், மணவாழ்க்கை, தனிப்பட்ட முறையில் தங்களது நோக்கங்கள், இலக்குகள் என மனம்விட்டுப் பேசினர். அமைப்புகளில் பணியாற்றும் தோழர்கள்கூட ஒருவருக்கொருவர் தமது உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ள நேரமில்லாத - வாய்ப்பு இல்லாத சூழல்தான் தற்போது உள்ளது. தோழர்களின் செயல்பாடுகள் எந்திரத்தனமாகவே இருக்கின்றன. இந்நிலையில் தோழர்களின் குடும்பங்களில் உள்ளவர்கள் ஒருவருக்கொருவர் மனம்விட்டுப் பேசிக்கொள்வதற்கான வாய்ப்பு அரிதிலும் அரிது. ஒரே கருத்தை ஏற்றுக்கொண்டவர்கள் அந்த கருத்துக்களால் தமது வாழ்வில் ஏற்படும் இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொண்டால்தான் பெரியார் பண்பாடு என்பது இயல்பாக வளரும். இந்த நோக்கில் திட்டமிடப்பட்ட இந்த அனுபவப் பகிர்வு அடுத்தநாள் பிற்பகல் வரை தொடர்ந்தது. முதற்கட்ட அனுபவப்பகிர்வை பொள்ளாச்சி தோழர் விஜயராகவன் மனம்விட்டுப்பேசி நிறைவுசெய்தார். இரவு 12 மணி வரை குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

## காட்டாறு வெளிவரத் துணைபுரியும் பேருதவிகள்

பொள்ளாச்சி நகராட்சியின் பொது சுகாதாரத்துறையில் செவிலியராகப் பணியாற்றி வந்த தோழர் ஆர்.தனலட்சுமி அவர்கள் கடந்த 31.01.2015 அன்று பணி ஒய்வுபெற்றார். இவர் திராவிடர் விடுதலைக்கழக பொள்ளாச்சி மாவட்டத்தலைவர் தோழர் விஜயராகவன் அவர்களின் துணைவியார் ஆவார். பணி ஒய்வின் நினைவாக காட்டாறு ஏட்டிற்கு ரூ 1000.00 நன்கொடையாக வழங்கினார்.

பல்லடம் சமர் மொமைல் உரிமையாளர் சாந்தி - தலைமைக் குழு உறுப்பினர் தோழர் பல்லடம் விஜயன் இணையரின் மகன் தோழர் சமரின் பிறந்தநாள் பிப்ரவரி 28. சமரின் பிறந்தநாளை முன்னிட்டு காட்டாறு ஏட்டிற்கு ரூ 5000.00 நன்கொடையாக வழங்கினர்.

திருப்பூர் மாவட்டம் சேவூர் முதலிபாளையம் இராஜேசுவரி- இரமேசு இணையரின் மகன் சித்தார்த்தின் பிறந்தநாள் பிப்ரவரி 21. மூன்றாவது பிறந்தநாள் நினைவாக ரூ 500.00 நன்கொடையாக வழங்கினர்.

திராவிடர் விடுதலைக்கழக பொள்ளாச்சி மாவட்டத்தலைவர் தோழர் விஜயராகவன், உடுமலை ஒன்றியச் செயலாளர் மலரினியன், சுயமரியாதை கலைப்பண்பாட்டுக் கழக கோவை மண்டல அமைப்பாளர் அ.ப.சிவா ஆகிய தோழர்கள் காட்டாறு ஏடு தொடங்கப்பட்ட நாள் முதல் ஒவ்வொரு மாதமும் 1000.00 ரூபாயை நன்கொடையாக வழங்கி வருகிறார்கள். சென்னை தோழர் பிரபாகரன் அழகர்சாமி ஜனவரி மாதத்தில் ரூ 10,000.00 வழங்கியுள்ளார். அனைவருக்கும் காட்டாறு குழு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

*நன்கொடை அனுப்புவோர் பணம் செலுத்த வேண்டிய வங்கி எண்:*
ASURANOODAKAM, KVB, Periyakulam Branch, NO: 1176115000003502 IFSC: KVBL0001176

# காதலர் நாளில் பா.ஜ.க அலுவலகத்தில் பெண்கேட்கும் போராட்டம்!

காதலர்நாளில் இந்தியா முழுவதும் உள்ள இந்துத்துவ அமைப்புகள் காதலர்களைத் தாக்குவதும், அவர்களுக்கு தாலி கட்ட வைப்பதும் தொடர்ச்சியாக நடைபெற்றுவருகிறது. தமிழ்நாட்டில் மட்டும் பெரியார் இயக்கங்கள் காதலர்களுக்கு ஆதரவு தெரிவித்து, காதலர் நாளைக் கொண்டாடி வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் காதலர்கள் அதிகமாகக்கூடும் பூங்காக்களுக்கு நேரில் சென்று வாழ்த்து அட்டை கொடுத்தும், இனிப்புகளை வழங்கியும் தங்கள் ஆதரவுகளைத் தெரிவிப்பது பெரியார் இயக்கங்களின் வழக்கம். இந்த ஆண்டும் தந்தை பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் புதுச்சேரியிலும், திராவிடர் விடுதலைக்கழகத் தோழர்கள் சென்னை கடற்கரையிலும் காதலர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் நிகழ்வை விழாபோலக் கொண்டாடினர். தமிழ்நாடு முழுவதும் துண்டறிக்கைகளை வழங்கினர்.

கோவையில் தமிழ்ப்புலிகள் அமைப்பினர் மேலும் சிறப்பாக ஒரு பணியைச் செய்துள்ளனர். தொடர்ந்து காதலர்களுக்கு தாலி கட்டுவோம் என அடாவடியில் இறங்கும் காவிகளுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், "பூங்காக்களில் தாலி கட்டாமல் யாரையும் நாங்கள் அழைத்துச் செல்லவில்லை. நீங்களும் இந்து, நாங்களும் இந்து. முறையாக உங்களிடம் பெண் கேட்கிறோம். பெண் கொடுங்கள்" என்ற முழக்கத்துடன் ஒரு போராட்டத்தை அறிவித்தனர். காவிகளின் கோட்டை என அவர்களே மார்தட்டிக்கொண்டிருக்கும் கோவையில் பிப்ரவரி 14 இல் தமிழ்ப்புலிகள் அமைப்பின் பொதுச் செயலாளர் தோழர் நாகை திருவள்ளுவன் தலைமையில் இப்போராட்டம் நடைபெற்றது. கோவை காந்திபுரம் தந்தை பெரியார் படிப்பகத்திலிருந்து தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் தோழர் கு.இராமக்கிருட்டிணன் முன்னிலையில் பேரணி தொடங்கி, பா.ஜ.க அலுவலகத்திற்கு பெண் கேட்கச் சென்றனர்.

தமிழ்ப்புலிகள் அமைப்பைச்சேர்ந்த தோழர்கள் சிலர் மாப்பிள்ளை போல உடைகளை அணிந்து தாம்பூலத் தட்டுடன் பா.ஜ.க அலுவலகத்திற்குப் பேரணியாகச் சென்றனர். பா.ஜ.க அலுவலகத்திற்குச் செல்லும் முன்னரே, அமைப்புச்செயலாளர் பேரறிவாளன், தலைமைநிலையச்செயலாளர் இளவேனில், மாவட்டச்செயலாளர் கவுதமன்மணி, தலைமைக்குழு உறுப்பினர் ஒட்டன்சத்திரம் பெரியார்மணி உட்பட 200 தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

இப்போராட்டம் குறித்து தமிழ்ப் புலிகளின் பொதுச்செயலாளர் நாகை திருவள்ளுவன் கூறும்போது, "இன்றைய சூழலில் ஜாதி மறுப்பு திருமணங்கள் ஊக்குவிக்கப்படவேண்டும். ஆனால் காதலர்தினம் கொண்டாடக்கூடாது என பி.ஜே.பியினர் தடுத்து வருகின்றனர். இந்தியாவில் உள்ள அனைவரும் இந்துக்கள் எனவும் கூறுகின்றனர். காதலர்கள் பார்க், பீச் போன்ற இடங்களில் சுற்றி கலாச்சாரச் சீர்கேடுகளை ஏற்படுத்துவதாகக் குற்றம் சாட்டுகின்றனர். எனவே நாங்கள் அவர்கள் கூறியபடி அங்கெல்லாம் சுற்றாமல் நேரடியாக பா.ஜ.க அலுவலகத்திற்கே பெண் கேட்டு வந்துள்ளோம்" என்றார்.

பெண் கேட்பது, பெண் கொடுப்பது என்பவை பெண்ணை ஒரு பொருளாக மட்டும் பார்க்கும் இந்துமதப்பண்பாடுதான். பெண்ணிய நோக்கில் இந்த முறை தவறு. இருப்பினும் காதலர்களை சுதந்திரமாக இருக்கவிடாமல் தாலி கட்டுவோம், அடிப்போம் என மிரட்டிக்கொண்டிருக்கும் காவிக் காலிகளுக்கு இந்தப் போராட்டம் மரண அடிதான். அர்ஜூன் சம்பத் கூட்டங்கள் இந்தப் போராட்டங்களுக்கு என்ன பதில் சொல்லப்போகிறார்கள்?

இதை இன்னும் செழுமைப்படுத்திக்கூட நடத்தலாம். ஒவ்வோர் ஆண்டும் இதேபோல காதலர் நாளில் அனைத்து முற்போக்கு இயக்கங்களும் ஒன்றுகூடி ஜாதி கடந்த காதலர்களைத் தேடித் தேடி ஒன்றிணைத்து இந்து அமைப்புகளின் அலுவலகங்களிலேயே திருமணம் செய்து வைக்கக்கோரி போராட்டம் நடத்தலாம். அவர்கள் என்ன காதலர்களைத் தேடுவது? நாமே காதலர்களை அழைத்துச் செல்வோம் ஜாதி கடந்த காதல் திருமணங்களின் பதிவை நடத்தி வைக்கச்சொல்வோம். அப்படி அவர்களை அம்பலப்படுத்துவோம். நாகை திருவள்ளுவன் கொளுத்திப் போட்டுவிட்டார். நாம் அந்தத் தீயைப் பரப்புவோம்.

'பெண்கள், ஆண்களும் மறைவான இடமும், இருளும் இல்லாவிட்டால் தான் பதிவிரதைகளாக இருக்க முடியும்' என்று அருந்ததியும், துரோபதையும் சொல்லி, தெய்வீகத் தன்மையில் மெய்ப்பித்துக் காட்டியதாகவும், இந்துமத சாஸ்திரங்களும், புராணங்களும் சொல்லுகின்றன. இன்னும் பலவிதமாகவும், மத சாஸ்திர ஆதாரங்களில் இருக்கின்றன. இவற்றின் கருத்து ஆண்களுக்குப் பெண்ணை அடிமையாக்க வேண்டுமென்பதல்லாமல் வேறில்லை.

பெண்மக்கள் அடிமையானது ஆண் மக்களாலேயே தான் ஏற்பட்டது என்பதும், அதுவும் "ஆண்மை"யும் பெண் அடிமையும் கடவுளாலேயே ஏற்படுத்தப்பட்டதாக எல்லா ஆண்களும் கருதிக் கொண்டிருக்கிறார்கள் என்பதும், அதோடு பெண் மக்களும், இதை உண்மை என்றே நினைத்துக் கொண்டு வந்த பரம்பரை வழக்கத்தால் பெண் அடிமைக்கு பலம் அதிகம் ஏற்பட்டிருக்கின்றதென்பதும், நடுநிலைமைப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் யோசித்துப்பார்த்தால் விளங்காமல் போகாது. பொது மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு ஒழிய வேண்டுமானால், எப்படி கடவுளாலேயே மக்களுக்கு பிறவியில் உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டிருக்கின்றது என்ற இந்துமதக் கொள்கையைச் சுட்டுப்பொசுக்க வேண்டியது அவசியமோ அதுபோலவே பெண் மக்கள் உண்மை விடுதலை பெற்று உண்மை சுதந்திரம் பெற வேண்டுமானால் "ஆண்மை"யும் "பெண் அடிமையும்" கடவுளால் உண்டாக்கப்பட்டவை என்பதற்குப் பொறுப்பாயுள்ள கடவுள் தன்மையும் ஒழிந்தாக வேண்டும்.

பெண்கள் விடுதலை பெறுவதற்கு இப்போது ஆண்களை விடப் பெண்களே பெரிதும் தடையாயிருக்கின்றார்கள். தங்களுடைய இயற்கைத் தத்துவங்களின் தன்மையையே தங்களை ஆண்களுக்கு அடிமையாகக் கடவுள் படைத்திருப்பதின் அறிகுறிகளாய்க் கருதிக் கொண்டிருக் கின்றார்கள். எப்படியெனில் பெண் இல்லாமல் ஆண் வாழ்ந்தாலும் வாழலாம்; ஆனால் ஆண் இல்லாமல் பெண் வாழமுடியாதென்று ஒவ்வொரு பெண்ணும் கருதிக் கொண்டிருக் கிறாள். அப்படி அவர்கள் கருதுவதற்கு என்ன காரணம் என்று பார்ப்போமானால், பெண்களுக்குப் பிள்ளைகள் பெறும் தொல்லை ஒன்று இருப்பதால் தாங்கள் ஆண்கள் இல்லாமல் வாழ முடியும் என்பதை ருஜுப்படுத்திக் கொள்ள முடியாதவர்களாயிருக்கின்றார்கள். ஆண்களுக்கு அந்தத் தொந்தரவு இல்லாததால் தாங்கள் பெண்கள் இல்லாமல் வாழ முடியும் என்று சொல்ல இடமுள்ளவர்களாயிருக்கின்றார்கள்.

அன்றியும் அப்பிள்ளை பெறும் தொல்லையால் தங்களுக்குப் பிறர் உதவி வேண்டியிருப்பதால் அங்கு ஆண்கள் ஆதிக்கம் ஏற்பட இட முண்டாய் விடுகின்றது. எனவே உண்மையான பெண்கள் விடுதலைக்கு பிள்ளை பெறும் தொல்லை அடியோடு ஒழிந்து போகவேண்டும். அது ஒழியாமல் சம்பளம் கொடுத்து புருஷனை நியமித்துக் கொள்வதாயிருந்தாலும் பெண்கள் பொதுவாக உண்மைவிடுதலை அடைந்துவிட முடியாது என்றே சொல்லுவோம். இம்மாதிரி இதுவரை வேறு யாரும் சொன்னதாகக் காணப்படாவிட்டாலும் நாம் இதைச் சொல்வது பெரிதும் முட்டாள்தனமோ என்பதாகப் பொதுமக்கள் கருதுவார்கள் என்று இருந்தாலும் இந்த மார்க்கத்தைத் தவிர - அதாவது பெண்கள் பிள்ளை பெறும் தொல்லையில் இருந்து விடுதலையாக வேண்டும் என்கின்ற மார்க்கத்தைத் தவிர - வேறு எந்த வகையிலும் அவர்களுக்கு விடுதலை இல்லை என்கின்ற முடிவு நமக்குக் கல்லுப் போன்ற உறுதி உடையதாய் இருக்கின்றது. சிலர் இதை இயற்கைக்கு விரோதம் என்று சொல்லவரலாம். உலகத்தில் மற்றெல்லாத் தாவரங்கள், ஜீவப்பிராணிகள் முதலியவை இயற்கை வாழ்வு நடத்தும்போது மானிட வாழ்க்கையில் மாத்திரம் இயற்கைக்கு விரோதமாகவே அதாவது பெரும்பாலும் செயற்கைத் தன்மையாகவே வாழ்வு நடத்தி வருகின்றபோது, இந்த விஷயத்திலும் இயற்கைக்கு விரோத மாய் நடைபெறுவதில் ஒன்றும் முழுகிப் போய்விடாது.

தவிர "பெண்கள், பிள்ளை பெறுவதை நிறுத்திவிட்டால் உலகம் விர்த்தியாகாது, மானிட வர்க்கம் விர்த்தியாகாது" என்று தர்ம நியாயம் பேசச் சிலர் வருவார்கள். உலகம் விர்த்தியாகா விட்டால் பெண்களுக்கு என்ன நஷ்டம்? மானிட வர்க்கம் பெருகாவிட்டால் பெண்களுக்கு என்ன ஆபத்து ஏற்பட்டு விடக்கூடும்? அல்லது இந்த தர்ம நியாயம் பேசுபவர்களுக்குத் தான் என்ன கஷ்டம் உண்டாகிவிடும் என்பது நமக்குப் புரியவில்லை. இதுவரையில் பெருகிக் கொண்டு வந்த மானிட வர்க்கத்தால் மானிட வர்க்கத்திற்கு ஏற்பட்ட நன்மைதான் என்ன என்பதும் நமக்குப் புரியவில்லை.

பெண்களின் அடிமைத்தன்மை பெண்களை மாத்திரம் பாதிப்பதில்லை. அது மற்றொரு வகையில் ஆண்களையும் பெரிதும் பாதிக்கின்றது. இதைசாதாரண ஆண்கள் உணருவதில்லை. ஆனால் நாம் இவ்விஷயத்தில் அதைப்பற்றிச் சிறிதும் கவலைகொள்ளவில்லை. பெண்களைப் பற்றியே கவலை கொண்டு சொல்லுகின்றோம். தற்கால நிலைமையில் பெண்களின் விடுதலைக்குப் பெண்களே வேறு எந்த முயற்சி செய்தாலும் அது சிறிதாவது ஆண்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்கலாம். ஆனால் இந்தக்காரியத்தில், அதாவது பெண்கள் பிள்ளை பெறுவதில்லை என்கின்ற காரியத்தில் ஆண்களுக்கு எவ்விதக் கஷ்டமும் நஷ்டமும் கிடையாது என்பதோடு ஆண்களுக்கு இலாபமும் உண்டு என்பதையும் தெரிவித்துக் கொள்ளு கிறோம். எப்படியெனில் ஒரு மனிதன் தான் பிள்ளைகுட்டிக்காரனாயிருப்பதினாலேயே யோக்கியமாகவும் சுதந்திரமாகவும் நடந்து கொள்ளப் பெரிதும் முடியாமலிருக்க வேண்டியவனாய் விடுகிறான். அன்றியும் அவனுக்கு அனாவசியமான கவலையும் பொறுப்பும் அதிகப்படவும் நேரிடுகின்றது.

குடி அரசு - 12.08.1928

# காதலர் நாளில் பா.ஜ.க அலுவலகத்தில் பெண்கேட்கும் போராட்டம்!













**தமிழ்நாடு அறிவியல் மன்றம்** நடத்தும் **குழந்தைகள் பழகுமுகாம்**

06.05.2015 முதல் 10.05.2015 வரை திண்டுக்கல்லில் நடைபெற உள்ளது.

முன்பதிவு மற்றும் தொடர்புகளுக்கு: ஆசிரியர் சிவகாமி: 98424 48175


வெளியீடு: சுயமரியாதை கலைப் பண்பாட்டுக் கழகம்

ஆக்கங்கள், விமர்சனங்களுக்கு: காட்டாறு, 1/810, முத்தமிழ்நகர், நத்தம்சாலை, திண்டுக்கல். 624 003 kaattaaru2014@gmail.com